ISSN 1391-9504

# விஜய்
Vijey விஜய்

04.11.2009 - மலர் 06, இதழ் 35



## புவி வெப்பமடைவதைத் தடுக்க செயற்கை மேகங்கள்

## கணினிப் பாவனையில் சிக்கல்களை தீர்க்கும் வழிகள்

# இலங்கையில் 'அரச சேவை' அறிமுகமான விதம்

## வலுவிழந்தோரின் மனோவலிமை
ஸ்போர்ட்ஸ்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மன்னனுக்கு எதிரான கலகம்

இரண்டாம் இராஜசிங்க மன்னனுக்கு எதிராக கலகம் ஒன்று ஏற்பட்டது. இதனால், அவர் செங்கடகலையைக் கைவிட்டு நிலம்பேக்குச் சென்று அங்கு வாழ்ந்தார். சில நாட்களை அங்கேயே செலவிட்டார். பின் ஹங்குரன்கெட்டைக்குச் சென்று அங்கே தங்கி வாழ்ந்தார்.

அரசனின் தவறால்தான் அந்தக் கலகம் ஏற்பட்டது. மன்னன் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் மக்களை கோபமூட்டியபடியே இருந்தான். மன்னனின் கொடிய செயல்கள் அதிகரித்தமையால் மக்களின் கோபமும் அதிகரித்தது. இதனால், அவர்கள் மன்னனை கொல்வதற்கு முயற்சித்தனர்.

கி.பி 1664 ஆம் ஆண்டு வால் நட்சத்திரம் ஒன்று தோன்றியது. அதனால் மக்கள் மேலும் கலவரம் அடைந்தனர். மன்னனின் சகுனம் சரியில்லை என நினைத்தனர். இதனால், மன்னனைக் கொல்லத் தீர்மானித்தனர். அரச பதவிக்கு இராஜசிங்கனின் மகனை நியமிப்பது பற்றி கலந்தாலோசித்தனர். அதனை இறுதியாக உறுதி செய்தனர்.

அம்பன்வெல ராலைதான் இச்செயல்கள் அனைத்திற்கும் தலைமை தாங்கினான். அவன் மன்னனுக்கெதிராக திசாபதிகள் பலரை ஒன்றுதிரட்டுவதில் வெற்றி பெற்றான். அப்பொழுது கலவரக்காரர்களையும் மன்னனுக்கெதிராக ஒன்று திரட்டினான். ஒருநாள் இக்குழுவினர் நிலம்பே மாளிகைக்குச் சென்றனர். அது நள்ளிரவு நேரம். அவர்கள் அங்கிருந்த காவலர்களை கொலை செய்தனர். மன்னனையும் பிடிக்க முயற்சித்தனர். எனினும், இராஜசிங்க மன்னன் முந்திக்கொண்டான். எதிரிகள் நெருங்காவண்ணம் பரிவாரங்களுடன் அவர்களுக்குத் தெரியாமல் மத்திய கண்டிக்குச் சொந்தமான கலஉட எனும் கிராமத்திற்கு சென்றான்.

அதன்பின், கலகக்காரர்கள் மன்னனின் மகனைத் தேடி செங்கடகலைக்குச் சென்றனர். மன்னனின் மகனாகிய இளவரசனை சிங்காசனமேற்றுவதே அவர்களின் முக்கிய நோக்கமாக இருந்தது. அதனைக் கேள்விப்பட்டு இளவரசன் அச்சமடைந்தான். மன்னனின் சகோதரி ஒருவருடன் கலஉட கிராமத்திற்குச் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமாக வடிவமைக்கப்பட்ட புத்தகப் பை சுகாதார அமைச்சினால் அறிமுகப்படுத்தப்படவுள்ளது

சிறந்த தரத்துடன் வடிவமைக்கப்பட்ட புத்தகப் பையொன்றை நாடு பூராகவுமுள்ள பாடசாலை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

தரமற்ற புத்தகப் பைகளை உபயோகிப்பதனால் பிள்ளைகள் நீண்டகால உபாதைகளுக்கு உட்படுவதாக விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சிகளினூடாக தெரியவந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அவ்வாறான புத்தகப் பைகளை உபயோகிக்கும் மாணவர்களுக்கு நரம்புகள் தொடர்பான உபாதைகள் மற்றும் கழுத்தில் தசைகள் இழுப்பு போன்ற உபாதைகள் ஏற்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, சிறந்த தரத்துடன் வடிவமைக்கப்பட்ட புத்தகப் பைகளை அறிமுகப்படுத்தவும் அவை பாவிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்போவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.



சுகாதார அமைச்சு பாடசாலை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்காக சிறந்த தரத்துடன் வடிவமைக்கப்பட்டிருக்கும் புத்தகப் பையின் மாதிரியொன்றை பற்றி மக்கள் சுகாதார வைத்தியர் கபில ஜயரத்ன சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அவர்களுக்கு விளக்கமளிப்பதையும், அருகில் குடும்ப சுகாதார செயலகத்தின் பணிப்பாளர் வைத்தியர் தீப்தி பெரேரா அவர்கள் நிற்பதையும் படத்தில் காணலாம்.




# உங்கள் குரலிலேயே பேசும் கெலண்டர்

ஒவ்வொரு நாளும் பரபரப்பாக இயங்கிக்கொண்டிருக்கும் எம்மால், சிலவேளைகளில் எம்மைச் சுற்றி என்ன நடக்கின்றது என்பதையே புரிந்து கொள்ள முடியாமல் இருக்கும். இதன்போது சில முக்கிய தினங்கள், வேலைகளைக்கூட நாம் மறந்து விடுவதோடு, அதற்காக வருந்துவதுமுண்டு. இதற்கு சிறந்த தீர்வாக அமைந்தது தான் 'செல்போன்'. அதில் சில விடயங்களைப் பதிவுசெய்து நினைவுபடுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்புள்ளது. இதைப்போன்று புதிதாக அறிமுகமாகியுள்ள இன்னுமொன்றுதான் 'பேசும் கெலண்டர்'. இதில் உங்கள் குரலிலேயே உங்களுக்கு நினைவுபடுத்திக்கொள்ள வேண்டிய விடயங்களை ஒலிப்பதிவு செய்துகொள்ளலாம்.



இந்த கெலண்டரில் உள்ள 'month', 'day' என்ற பொத்தான்களை முறையே அழுத்துவதோடு, பின்னர் 'hold to record' என்ற பொத்தானை அழுத்தி உங்களுக்கு ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டிய விடயங்களை உங்கள் குரலிலேயே சொல்லலாம். அது அப்படியே ஒலிப்பதிவு செய்யப்பட்டு உரிய திகதியில் அதிலுள்ள 'today' எனும் பொத்தானை பிரகாசிக்கச் செய்தவாறு உங்கள் குரலிலேயே தகவலை தெரியப்படுத்தும். மின்கலத்தின் உதவியில் இயங்கும் இக்கெலண்டர், மின்கலத்தின் சக்தி தீரப்போகின்றது என்றால் அதையும் கூட உங்களுக்குத் தெரியப்படுத்தும்.

10 அங்குலம் அகலமும் 12 அங்குலம் நீளமும் உடைய இந்தக் கெலண்டரை அதில் உள்ள காந்த அமைப்பொன்றின் உதவியுடன் குளிர் சாதனப்பெட்டியின் கதவு அல்லது ஏதாவதொரு உலோக சாதனத்தில் ஒட்டியோ அல்லது சுவர் உட்பட உங்களால் செவிமடுக்கக்கூடிய எந்த இடத்திலேனும் வைக்கலாம். AAA Alkaline ரக மூன்று மின்கலங்கள் இதன் இயக்கத்துக்காகத் தேவைப்படுகின்றன. இதில் நாளாந்த நிகழ்வுகள், வாராந்த நிகழ்வுகள், வருடாந்த நிகழ்வுகள் (பிறந்தநாள், திருமண நாள் போன்றவை), பொருட்கள் கொடுக்கல்-வாங்கல் உட்பட எவற்றையெல்லாம் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டுமோ அனைத்தையும் ஒலிப்பதிவு செய்துகொள்ளலாம்.

-ஜீநு

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை:

# நலன்புரி முகாம் மாணவர்களின் ஆதங்கம்



இவ்வாண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் கடந்த மாதம் வெளியிடப்பட்டிருந்தபோதும், நலன்புரி முகாம்களில் இருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் பெறுபேறுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எந்தவொரு அடிப்படை வசதிகளும் போதிய ஆசிரியர்களும் இல்லாத நிலையில், மிகவும் இக்கட்டான சூழ்நிலைக்கு மத்தியிலும் இம்மாணவர்கள் தங்களுக்குக் கிடைத்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி, கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு, புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர். எனினும், அதற்கான பெறுபேறுகள் தங்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்பது அவர்களை பெரிதும் கவலையடையச் செய்துள்ளது.

நாடளாவிய ரீதியில் பெறுபேறுகள் வெளியிடப்பட்டு சுமார் ஒரு மாதம் கடந்த நிலையில், 'எமது பெறுபேறுகள் இன்று வரும், நாளை வரும்' என எதிர்பார்த்து அம்மாணவர்கள் தினமும் ஏமாற்றத்துக்குள்ளாகிக் கொண்டிருக்கின்றனர். 'இன்னும் எமது பெறுபேறுகள் வெளிவரவில்லையே?' என்ற ஏக்கத்துடன் பெற்றோர்களை வினவும் மாணவர்களுக்கு அவர்களின் பெற்றோர்களால் தகுந்த பதிலை அளிக்க முடியாமல் இருக்கின்றது. அத்துடன், தமது பெறுபேறுகளை எதிர்பார்த்து மாணவர்கள் தினமும் பாடசாலையில் காத்திருக்கின்றனர் என்றும் அறியக்கிடைக்கின்றது.

அத்துடன், பெறுபேறுகள் வெளியிடப்படாதநிலையில், பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் இருப்பார்களாயின், உரியவர்களுக்கு அதற்கான உதவித்தொகை கிடைக்காமல் போகுமோ என்ற ஆதங்கமும் அவர்களில் சிலருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.


விஜய் Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk


### 2009, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோருக்கு ஓர் அரிய வாய்ப்பு

இவ்வருடம் நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்களை 'விஜய்' இல் பிரசுரிக்க விரும்புபவர்கள், மாணவரின் விபரத்துடன் அவரது புகைப்படத்தையும் இணைத்து பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன்,

**புலமைப்பரிசில் சித்தியடைந்தோர்,**
**'விஜய்'**
த.பெ. எண் 2037, கொழும்பு.

என்ற முகவரிக்கு நொவெம்பர் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். **ஒரே வகுப்பில் பலர் சித்தியடைந்திருப்பின் அவர்கள் தங்கள் ஆசிரியர்களுடன் குழுவாக எடுத்துக்கொண்ட புகைப்படங்களையும் அனுப்பலாம்.** இதற்காக கட்டணங்கள் எதுவும் அறவிடப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சாதனை புரிந்த சிறுவர்கள்

## சார்ள்ஸ் பெபேஜ்

இயந்திரவியல் கணினி ஒன்று குறித்து முதன் முதலாக சார்ள்ஸ் பெபேஜ் என்பவர் தனது கருத்தை வெளியிட்ட போது அவருக்கு வயது 19 மாத்திரமே. இவரை 'நவீன கணினியின் தந்தை' என்றும் அழைப்பர்.

## வோல்டர் லைன்ஸ்

பிரித்தானிய பாடசாலை மாணவனாகிய லைன்ஸ் தனது 15 ஆவது வயதில் ஸ்கூட்டரை வடிவமைத்து அறிமுகப்படுத்தினான். ஒரு காலத்தில் பிரித்தானியாவில் முதல்தர உற்பத்தியாக இருந்த 'ட்ரெயெங்க்' விளையாட்டுப் பொருட்களையும் இவரே உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.


ச்செஸ்டர் கிரீன்வுட்

## லூயி பிரெய்ல்

கண்பார்வையற்றோர் புள்ளிகளின் உதவியுடன் எழுதும் 'பிரெய்ல்' முறையைப் பற்றி கேள்விப் பட்டிருப்பீர்கள். இம்முறையை லூயி பிரெய்ல் என்பவரே அறிமுகப்படுத்தினார். இந்த பிரெய்ல் முறையை அவர் அறிமுகப்படுத்தியபோது அவரின் வயது 15 மாத்திரமே. லூயி பிரெய்லும் கண்பார்வையற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.


பிரேங் எபர்சன்

## பீற்றர் எல்வர்ஸ்

1958 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் ஹேலின் எனும் தீவில் காற்றுப்படகு விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதனை அறிமுகப்படுத்தியவர் பீற்றர் எல்வர்ஸ் என்பவராவர். அப்பொழுது அவருக்கு வயது 12 மாத்திரமே.

## பிரேங் எபர்சன்



1905 ஆம் ஆண்டு அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாநிலத்தில் சென்.பிரான்சிஸ்கோ நகரில் பிராங் எபர்சன் எனும் சிறுவன் 'பொப்சிகல்' ஐஸ் கிறீமை அறிமுகப்படுத்தினான். அப்பொழுது அவனது வயது 11 வருடங்கள் மாத்திரமே.

குளிர் வலயத்தில் பனிவிழும் நாளொன்றில் பழரசப் பாத்திரமொன்றை வீட்டின் வெளியே வைத்தபொழுது அவனுக்கு இந்த எண்ணம் உருவானதாகக் கூறப்படுகிறது. அப்பொழுது சிறுவனாகிய பிரேங் எபர்சன் அதற்கு வைத்த பெயர் 'எப்சிகல்' என்பதாகும்

1923 ஆம் ஆண்டு வரை அவர் இக்கண்டுபிடிப்பிற்கான 'பேடன்ட்' அனுமதிப்பத்திரத்தை பெறவில்லை. பின்னர் அவரின் மகன் அதற்கு எப்சிகல் என்ற பெயரை பொப்சிகல் என பெயர் மாற்றம் செய்தார்.




## ச்செஸ்டர் கிரீன்வுட்

ஐக்கிய அமெரிக்காவின் மேன் பிரதேசத்தில் ஃபாமின்டன் எனும் இடத்தில் கிரீன்வுட் எனும் சிறுவன் 1873 ஆம் ஆண்டு இயர்மஃப் (Earmuff) ஐ கண்டுபிடித்தான். அப்பொழுது அவனுக்கு 15 வயதாகும். அவரின் Earmuff உற்பத்தி நிலையத்தை ஆரம்பித்து அவரின் உற்பத்திகள் முதன்முதலாக முதலாவது உலக யுத்தத்தின்போது அமெரிக்க படைவீரர்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டன.

## ஜோன் ஜே.ஸ்டோன்-பாக்கர்

ஜோன் மற்றும் அவரின் சகோதரியாகிய எலய்ன் டபிள்யூ.ஸ்டோன் பாக்கர் 1989 இல் தண்ணீர் கண்ணாடி குவளையொன்றில் ஐஸ் வெளியேறாமல் தேக்கி வைக்கக்கூடிய விண்மீன் தோற்றமுடைய உபகரணம் ஒன்றைத் தயாரித்தார்கள். அப்பொழுது ஜோனின் வயது 9 மாத்திரமே. இதற்காக அவர் 'பேட்டன்' காப்புரிமையை பெற்றுக் கொண்டார். இவ்வாறு காப்புரிமை பெற்ற மிகக்குறைந்த வயதை யுடையவர் இன்று வரை ஜோன் தான் என்பது குறிப்பிடத் தக்கது.

## ஒஸ்டின் மெகிட்

ஐக்கிய அமெரிக்காவின் பாடசாலை மாணவனாகிய மெகிட் பேஸ்போல் மட்டை, பந்து மற்றும் கைக்கவசம் ஆகியவற்றை பாதுகாப்பாக சைக்கிளின் ஹென்டிலில் தொங்க வைத்துக் கொண்டு செல்லக்கூடிய உபகரணம் ஒன்றை அறிமுகப்படுத்தினான். அப்பொழுது அவனுக்கு வயது ஒன்பதாகும். அவன் அதற்காக 2000 ஆம் ஆண்டில் 6029874 எனும் இலக்க ஐக்கிய அமெரிக்க 'பேட்டன்' காப்புரிமையை பெற்றுக் கொண்டான்.

-இரஞ்சித் ஜெயகர்

படத்தை
இங்கே
ஒட்டவும்



விஜய்
மாணவர் கழகம்
விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:..................................
முகவரி:..................................
..................................
பாடசாலை:..................................
வகுப்பு:..................................
திகதி: ..................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “சந்திரயான் 2 திட்டத்தை நிறைவேற்றுவதே குறிக்கோள்”



## இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் புதிய தலைவர் தெரிவிப்பு

**கடந்த மாதம் 30 ஆம் திகதியுடன் இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் (ISRO) முன்னாள் தலைவர் மாதவன் நாயரின் பதவிக்காலம் முடிவடைந்துள்ளது. இதனை அடுத்து, கடந்த மாதம் 31 ஆம் திகதியிலிருந்து முன்னாள் திருவனந்தபுரம் விக்ரம் சாராபாய் விண்வெளி ஆய்வு மையத்தின் இயக்குனராக பணியாற்றிய கலாநிதி ராதாகிருஷ்ணன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். சந்திரயான் திட்டத்தின் மூலம் PSLV செயற்கைக்கோள் ஏவுகணைத் தயாரிப்பில் இவர் முக்கிய பங்கினை வகித்துள்ளார்.**

**“சந்திரயான் திட்டத்தின் 2 ஆவது கட்டத்தை செயல்படுத்துவதுதான் எனது முக்கிய குறிக்கோள். அத்துடன், விண்வெளி ஆய்வு மைய தொழில்நுட்பத்தை சாதாரண மக்களுக்கும் பயன்படும் வகையில் செயல்படுத்துவதே எனது அடுத்த திட்டமாகும்” என்று புதிய தலைவர் தெரிவித்துள்ளார்.**

# 10 நாட்களை விண்வெளியில் கழிக்க 35 மில்லியன் டொலர்கள்

தற்போது, விண்வெளியில் அமைக்கப்பட்டு வருகின்ற சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு மனிதர்களை சுற்றுலா அனுப்பும் திட்டம், ரஷ்யா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் பிரபலமாகி வருகின்றது.

அதன்படி, சர்வதேச விண்வெளி நிலையத்தில் 10 நாட்களைக் கழிப்பதற்கு ஒரு பயணியிடமிருந்து 35 மில்லியன் டொலர்களை ரஷ்ய விண்வெளி நிறுவனம் கட்டணமாக வசூலிப்பதாக ரஷ்ய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. இதேவேளை,



இந்தியாவும் மனிதர்களை விண்வெளிக்கு சுற்றுலா அனுப்புவதற்குத் திட்டமிட்டுள்ளது. இதற்காக, ரஷ்யாவிடம் இருந்து விண்வெளி ஓடமொன்றை வாடகைக்குக் கேட்டுள்ளது இந்தியா.



விண்வெளித் துறையில் வளர்ச்சி கண்டுவரும் இந்தியா, கடந்த 1984 ஆம் ஆண்டில்தான் முதன்முறையாக விண்வெளிக்கு மனிதனை அனுப்பியது. அப்போது, இந்திய விண்வெளி வீரர் ராகேஷ் சர்மா, ரஷ்யாவின் ‘சோயுஸ்’ விண்வெளி ஓடத்தில் விண்வெளிக்குச் சென்று, அங்கு ஒரு வாரம் தங்கியிருந்தார்.

இந்தியாவின் இந்தத் திட்டம் பற்றி ரஷ்ய விண்வெளி நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் அலெக்சி கிரஸ்னோவ் கருத்து வெளியிடுகையில்;

''விண்வெளிக்கு மனிதர்களை சுற்றுலா அனுப்புவதற்காக, விண்வெளி ஓடமொன்றைக் கேட்டு இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் விண்ணப்பித்துள்ளது. இது முற்றிலும் வர்த்தக அடிப்படையிலானது. ஒரு தடவை மட்டுமே பயன்படுத்தக் கூடிய ‘சோயுஸ் டி.எம்.ஏ’ விண்வெளி ஓடத்தில் 2 சுற்றுலாப் பயணிகள் பயணம் செய்யலாம். அதை ரஷ்ய விண்வெளி வீரர் இயக்குவார். இதற்கான கட்டணம் பற்றி எதுவும் கூறமுடியாது. அது, பயண வழித் தடத்தையும் பயண நேரத்தையும் பொறுத்து நிர்ணயிக்கப்படும்'' என கூறியுள்ளார்.


இதனைத் தொடர்ந்து, ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் இடையே ஓர் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. அதன்படி, விண்வெளி ஓடம் தயாரிக்க ரஷ்யா இந்தியாவுக்கு பயிற்சி அளிக்கும். எனினும், அந்தத் திட்டம் காலதாமதம் ஆகும் என்பதால், அதுவரை மனிதர்களை விண்வெளிக்கு சுற்றுலா அனுப்புவதற்கு ரஷ்ய விண்வெளி ஓடமொன்றை இந்தியா கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

‘செங்கிரகம்’ என அழைக்கப்படும் செவ்வாய்க் கிரகத்தின் மேற்பரப்பிலும் நீர் இருப்பதாக நம்பத்தகுந்த, போதிய சாட்சியங்கள் கண்டறியப்பட்டுள்ளதாக ஐக்கிய அமெரிக்காவின் விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

செவ்வாய்க் கிரகம் குறித்த தகவல்களை கண்டறியும் பொருட்டு அனுப்பப்பட்ட ‘மாட்டியன் ப்ரோப்’ எனும் ஓடத்தில் பொருத்தப்பட்டுள்ள எம்.ஆர்.ஓ.கெமராவின் மூலம் பல காட்சிகள் படம் பிடிக்கப்பட்டன. இக்காட்சிகள் பயனுள்ள தகவல்கள் பலவற்றை வெளிப்படுத்தியிருக்கின்றன. அதன்படி, காலம் காலமாக செங் கிரகத்தின் மீது மோதிய எரிகற்களால் அங்கு ஆழமான கிடங்குகள் உருவாகியுள்ளன என்றும் அந்த கிடங்குகளில் நீர் நிரம்பி, பனிக் கட்டியாக மாறியுள்ளதாகவும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

அத்துடன், செவ்வாய்க் கிரகத்தில் முற்காலத்தில் நீர் இருந்திருக்குமானால், அக்காலகட்டத்தில் அங்கு உயிரினங்களும் வாழ்ந்திருக்கலாம் என்றும் அதற்கான சாட்சியங்களைத் தேடிக்கண்டறியலாம் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாகவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

செவ்வாய்க் கிரகத்தை மூடியுள்ள செந்நிற தூசுப்படலத்தால் இந்த பனிக்கட்டிப் படிவுகள் மூடப்பட்டுள்ளதாகவும் எம்.ஆர்.ஓ. கெமராவில் உள்ள அதிகூடிய கதிர்த்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, அந்த தூசுப்படலத்தின் கீழ் உள்ள பனிக்கட்டிப் படிவுகளை படம்பிடிக்கக்கூடியதாக இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



## செவ்வாயிலும் நீர் உள்ளதாம்!




புவி வெப்பமடைவதால் துருவப் பகுதிகளில் உள்ள பனிக்கட்டிகள் வேகமாக உருகி வருகின்றன. இதனால், கடல் நீர்மட்டம் உயர்ந்து வருகின்றது. இந்த நிலை நீடித்தால் பூமிக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. இந்த ஆபத்தை எதிர்கொள்ளும் விதத்தில் இங்கிலாந்து அரசு புதிய திட்டம் ஒன்றில் இறங்கி உள்ளது.

# புவி வெப்பமடைவதைத் தடுக்க செயற்கை மேகங்கள்



செயற்கை மேகங்களை உருவாக்கி-பூமியை குளிர்ச்சி அடையச் செய்து-வெப்பமடைவதைத் தடுப்பதே இத்திட்டமாகும்.

இதற்கென விசேட படகுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த படகுகள் மிக உயரமான திருகு வடிவ குழாய்களைக் கொண்டுள்ளன. படகுகளில் உள்ள மோட்டார்கள் கடல்நீரை உறிஞ்சி, இந்த குழாய்கள் மூலம் வானில் பீய்ச்சி அடிக்கும். இது காற்றுடன் கலந்து மேகங்களின் கருப்பகுதியை உருவாக்கும். இதன் மூலம் படிப்படியாக செயற்கை மேகங்களை உருவாக்க முடியும். இதேபோல் 2 ஆயிரம் படகுகளை பசுபிக் சமுத்திரத்தில் நிறுத்தி, செயற்கை மேகங்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கான திட்ட மதிப்பீடு 4 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலாகும்.

இந்த திட்டத்தின் மூலம் பூமிக்கு மேல் உருவாக்கப்படும் செயற்கை மேகங்கள் சூரிய கதிர்வீச்சுகளை தடுக்கும் ஒரு போர்வை போல் செயல்படும். மேலும், இதனூடாக மழை பொழிவிக்கப்படுவதன் மூலம் புவி குளிர்ச்சி அடையும். அத்துடன், இவை காபன் டயொக்சைட் உமிழ்வையும் கட்டுப்படுத்தும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆங்கிலேயரின் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி கேணல் ஸ்குவட்டின் கீழ் இருந்தது. இவரின் படைப்பிரிவுகள் 1795-1796 வரையான காலப்பகுதிகளில் பல தாக்குதல்களை நடத்தி ஒல்லாந்தர் வசமிருந்த இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றியது. அப்பகுதிகளின் இரண்டு வருட நிர்வாகத்தில் தென்னிந்திய அதிகாரிகளே வரிவசூலித்தனர். காலப்போக்கில் வரியிறுப்பாளர் குழப்பம் செய்யவே இங்கிலாந்து நேரடியாக நிர்வாகத்தைக் கையேற்று 1798 இல் பிரட்ரிக் நோர்த்தை ஆளுநராக நியமித்தது. இவரின் காலப்பகுதியே சிவில் சேவையின் ஆரம்ப காலமாகும் அச்சேவையே அரச தொழில்களில் முதலிடம் பெற்றது.**

## உயர் பதவி

இந்த சிவில் நிர்வாக சேவையினால் வரி சேகரிப்பு பொதுச்சொத்து இருந்தது. பொதுச்செயலர், கணக்காளர், வர்த்தக அலுவலர், அரச விவகார உப செயலர், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, முல்லைத்தீவு,காலி,மாத்தறை,கொழும்பு இருக்கவேண்டும் என்றும் விதிமுறைகளை விதித்தார். அடிக்கடி பதவி மாற்றங்கள் நிகழ்ந்ததால் இப்பதவியால் எவ்வித பலனும் கிடைக்கவில்லை. அத்துடன், புதிய கலெக்டர்களுக்கு உத்தியோகம் வகித்த பிரதேசம் பற்றிய அனுபவமும் அமையவில்லை.எனவே, ஆளுநர் பிரெட்ரிக் நோர்த் கலெக்டர் பதவியை ரத்துச்செய்து இந்த ஏஜன்டுகளை நேரடியாகவே வரி வசூலிக்க நியமித்தார்.இதன் காரணமாக, யாழ்ப்பாண மட்டக்களப்பு, காலி, கொழும்பு கலெக்டர்களின் பதவி பறி போனது.

## இலங்கை சிவில் சேவை

1802 ஆம் ஆண்டின் ஆரம் பக்கட்டத்தில் எடுக்கப்பட்ட பிரதான தீர்மானங்களில் ஒன்று தான் கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி அதிகாரிகளை திருப்பி அனுப்பிவிட்டு 'இலங்கை சிவில் சேவை' என வேறொரு நிர்வாக சபையை நிறுவுவதாகும். அதன்படி இங்கிலாந்திலிருந்து ஆங்கில அதிகாரிகள் 21 பேர் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டனர். இவர்கள்



# சிவில் சேவிஸ் எனும்

பாதுகாப்பு மக்களுக்கான செலவழிப்பு யாவும் நடைமுறைப்படுத்தப்பட்டன. சிங்கள மன்னராட்சியில் கோரளை மஹம்மயாக்கள் ரட்டே மஹத்மயாக்கள் வகித்த பொறுப்புத்தான் ஆங்கிலேயர் ஆட்சியில் சிவில் சேவை அதிகாரிகளால் வகிக்கப்பட்டது. சிவில் சேவையாளர்கள் ஏஜன்ட், உப ஏஜன்ட் கமிஷனர் இயக்குநர் எனப் பல தரங்களில் அமைத்திருந்தனர். நீதித்துறையிலும் சில பொறுப்புக்கள் வகித்ததோடு நாட்டின் நாகரிகக் கலை கலாசார அபிவிருத்திக்கும் அவர்கள் பங்காற்றினார்கள். பரீட்சை மூலமே திறமை கண்டு தெரிவு செய்யப்பட்ட அவர்களுக்கு மத்தியில் பொதுச்செயலாளர் பதவியே உயர்ந்ததாகும்.

ஆகிய நகரங்களின் கலெக்டர்களாக செயலாற்றினர். பொதுச்செயலாளராக ஹியுக் லெக்ஹோர்னும் உப செயலாளராக வில்லியம் போய்ட்டும் பணியாற்றினர். ஏனையவர்கள் பொறுப்புக்களில் தற்காலிகமாக நியமிக்கப்பட்டனர். அவர்களின் பெயர்கள் ஹென்றிமாஷல் காவின்ஹெமில்டன் சில்வஸ்டர் கோர்டன், ரொபர்ட் பெரி ஜோர்ஜ் லூசிக்னன் ஜோசப் ஜொய்னவில் அந்தனி பர்டோ என்பனவாகும். இவர்களில் மூவர் பதின்மூன்று வயதுள்ளவர்கள்.ஜோர்ஜ் லூசிக்னன் பிரெஞ்ச், இத்தாலி, கிரேக்க, துருக்கி மொழிகளும் தெரிந்த இளைஞராவார்.

## நிர்வாக சீர்திருத்தம்

ஆளுநர் பிரெட்ரிக் நோர்த்

## தேசிய அரச பரிபாலன சபை

ஐரோப்பாவில் ஒப்பமிடப்பட்ட 'ஏமியன்ஸ்' சமாதான ஒப்பந்தத்தின் மூலம் 1802 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் கடற் பிரதேசங்கள் இங்கிலாந்தின் காலனித்துவமாக மாறின. அதனால், கிழக்கிந்திய வர்த்தக கம்பனிக்கு அதுவரை கிடைத்து வந்த வருமானம் ஆளுநர் வசம் வந்தது. அதன் நிர்வாகமும் அவர் கைக்கு வந்ததால் அதை ரத்துச் செய்துவிட்டு தேசிய அரச பரிபாலன சபையை நிறுவினார். அதன்படி பிரதம நீதியரசர், ராணுவக் கட்டளை அதிகாரி, பொதுச் செயலர் ஆகியோரோடு தன்னையும் தான் விரும்பும் இருவரையும் சேர்த்து அதை உருவாக்கிக்கொண்டார்.


இங்கிலாந்து அரச செயலரினால் நியமிக்கப்பட்டவர்களாவர். சிவில் சேவைக்குப் பாதிப்பு ஏற்படுமென்று ஓய்வு பெற்ற தளபதிகள் நியமிக்கப்படுவதில்லை.

## மீண்டும் திருத்தம்

ஆளுநர் பிரெட்ரிக் நோர்த் இரண்டாம் முறையாகவும் நிர்வாகத்தில் சீரமைப்பு செய்தார். அதன்படி அரச பரிபாலன சபையின் கீழ் மேலும் இரு பிரிவுகள் உருவாக்கப்பட்டன.அவ்விரண்டையும் மத்திய பரிபாலனசபை வருமான வர்த்தக சபை எனலாம். கிழக்கிந்திய வர்த்தகக் கம்பனி காலத்தில் வருமான வர்த்தகச் சபைக்கு முக்கியத்துவமளிக்கப்பட்ட போதும் ஆளுநர் பிரட்ரிக்







## தாராள சிந்தை

கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தின் அதிகாரம் நீக்கப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, காலி, மாத்தறை, கொழும்பு ஆகிய பகுதிகளில் கலெக்டர்களாகப் பணிபுரிந்த அதன் அதிகாரிகளை ஆளுநர் பதவி நீக்கவில்லை.எனினும்,அவர்கள் பதவி விலகினர் இது 1801 இல் நிகழ்ந்தது.

## முழு நிர்வாகம்

19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் சிவில் சேவை அதிகாரிகள் வசமே நிர்வாகம் முழுவதும் கடற்பிரதேச நிர்வாகத்தைச் சீர்திருத்தி வருமான வர்த்தகச் சபையை உருவாக்கினார். அதன் கீழ் நிர்வகிக்க பிரதேச வரி நிர்வாகப் பிரிவு,கருவாப் பிரிவு, முத்துக்குளிப்புப் பிரிவு என மூன்று பிரிவுகளை ஏற்படுத்தினார். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, காலி, கொழும்பு கலெக்டர்களின் வேலைப் பளு காரணமாக அவர்களால் மத்திய நாட்டு வருமானத்தை வசூலிப்பது சிரமம் என்பதற்காகவும்1 3 சிறு பகுதிகளாக அவற்றைப் பிரித்து தனித்தனி ஏஜன்டுகளை நியமித்தார். கலெக்டர்களாலும் தெரிவு செய்யப்படும் அவர்கள் ஆங்கிலேயராகவே



நோர்த் மத்திய பரிபாலனப் பிரிவுக்கே முக்கியத்துவம் அளித்தார். அதில் ஆளுநர் பொதுச்செயலர், உப செயலர், நிதித்துறை அதிகாரி, கணக்காய்வாளர் ஆகியோர் பொறுப்பு வகித்ததோடு பொதுச்செயலரின் கீழ்தான் வருமான வர்த்தக சபை இயங்கியது. கரையோரப் பிரதேசங்கள் எட்டு ஏஜன்ட் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு வருமான வர்த்தகச் சபையின்கீழ் நிர்வகிக்கப்பட்டன.

இவற்றில் திறமை இல்லாதவருக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை. 1833 இல் தெரிவு செய்யப்பட்ட 23 பேரில் இத்தகைய திறமை இருவருக்கு மட்டுமே இருந்தது. இதைக் கேள்விப்பட்ட காலனித்துவச் செயலர் கண்டிப்பை அதிகரித்தபோதும் பலன் கிடைக்கவில்லை. காரணம் 1832 இல் 'டொனமூர்' கமிஷனின் ஆலோசனைப் படி அரசின் செலவீனங்களைக் கட்டுப் படுத்தும்முகமாக ஊதியத்தைக் குறைத்ததாகும். அதை ஈடுசெய்ய தோட்டத் தொழிலில் லாபம் பெறலாம் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச சேவை



### சிவில் சேவை சீர்குலைவு

உடனே அரச செயலர் வர்த்தக விவசாய நடவடிக்கைகளுக்கு தடைவிதித்து சொத்துக்களை விற்றுவிடுமாறும் இன்றேல் ராஜினாமாச் செய்யுமாறும் பணிப்புரை விடுத்தார். எனினும், அரச அனுமதியுடன் காணி கொள்வனவு செய்யப்பட்டிருந்ததால் விற்பது நஷ்டம் எனக் கருதி சட்டம் ரத்துச் செய்யப்பட்டது. எனினும், புதிய அதிகாரிகள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

ஓய்வூதியத்தை வழங்கி பழைய முறையிலன்றி திறமை அடிப்படையிலேயே பதவி உயர்வும் அளிக்கப்பட்டது. அத்தோடு நீதிபதிப் பதவியும் பொறியிலாளர் பதவியும் அளவைத் திணைக்கள பிரதான உத்தியோகஸ்தர் பதவியும் சிவில் சேவைக்கு உட்படுத்தப்பட்டன.

பிரதான சிவில் சேவை அதிகாரிகள் எட்டு வருடகாலம் கடமையாற்றிவிட்டு ஓய்வு பெற்று நாடு திரும்பலாம். இரண்டாம்தர அதிகாரிகள் 12 வருட கால சேவைக்குப் பின் பதவி விலகலாம். அப்போது ஒரு பகுதி சம்பளத்தோடு சேவைக்கால இருவருட விடுமுறையும்

சிலிமைக்கூட செலவழிக்கத் தடை விதித்தார். வருமான வர்த்தக சபையைக் கலைத்து வருமான கமிஷனரை நியமித்தார். ஏஜன்ட்மாரை கலெக்டர்களாகப் பதவி உயர்த்தினார். உள்ளூர் மொழிகளையும் கட்டாயமாக்கினார். முதலில் சிங்களமும் போர்த்துக்கேயமும், 1813 முதல் தமிழும், 1824 க்குப் பின் போர்த்துக்கேயம் ரத்தாகி சிங்களமும் தமிழும் நிலைத்தன.

### மொழியில் கண்டிப்பு

1822 இல் சிங்களத்திலோ, தமிழிலோ திறமையற்றவர்களுக்கு உப ஏஜன்ட்

இங்கிலாந்தில் மட்டுமே பரீட்சை நடத்த முடிவாகியது. அத்துடன், குடியேற்றச் செயலாளரின் தெரிவு முறையை நீக்கி பரீட்சை மூலம் 'ரைட்டர்' தெரிவாகினர். அது இலங்கையருக்கும் வாய்ப்பாகியது.

### தற்போதைய நிலை

1891 இல் மீண்டும் இலங்கையில் இத்தெரிவு நிகழ்ந்தது. தெரிவானோர் சிவில் சேவை'லோவர் டிவிஷன்'என வேறாகக் கணிக்கப்பட்ட பின்னர் அப்பெயர் 'லோகல் டிவிஷன்' என்றாகியது. போட்டியின்றித் தெரிவு

இதனால்,1830-1850 வரை சிவில் சேவை சீர்குலைந்தது.

### புதிய ஊக்குவிப்பு

பலர் மேலிடக் குற்றச்சாட்டுக்கு அகப்படாத முறையில் சிறுசிறு தொழில்களை செய்தனர். ஓய்வூதியமின்றி குறைந்த சம்பளத்தில் பிறநாட்டில் பழைய முறைப்பதவி உயர்வுடன் பணியாற்றியது அவர்களை அதிகம் பாதித்தது. திறமையோ இல்லையோ பழைய முறையில் பதவி உயர்வு வழங்க சாதாரண வேலைக்கோ விசேட வேலைக்கோ அரச செயலருக்கு அறிவித்து அதிகாரிகளை இங்கிலாந்திலிருந்து அழைக்க ஆளுநரால் முடிந்தது.1845இல் அரச வருமானம் அதிகரித்து

பெற்றுக்கொள்ளலாம் எனும் சலுகையும் இருந்தது. இதனால், இடைக்கிடையே அனுபவம் பெற்றோரின் தொகை குறையவே நிர்வாகம் சீர்குலைந்தது.

### புதிய ஆளுநர்

1805 இல் ஆளுநர் பிரட்ரிக் நோர்த்தின் நிர்வாகக் காலம் முடிவுற்றதும் தோமஸ் மெட்லன்ட் ஆளுநராக நியமிக்கப்பட்டார் இவர். சிவில் சேவையில் உள்ள குறைபாடுகளை ஆராய்ந்தார். ஊதியக்குறைவினாலும் வியாபார அனுமதி செலவீனங்களில் பொறுப்பின்மையாலும் திறைசேரி நஷ்டம் அடைவதைக் கண்டறிந்தார். இதனால், அதிக ஊதியம் வழங்கி வியாபார உரிமையை ரத்துச்செய்தார். நிதித்துறையில் நிபந்தனை விதித்து அனுமதியின்றி ஒரு

பதவிக்கு மேல் வழங்குவதில்லை எனும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதனால், இரண்டில் ஒரு மொழியைத் தெரிவு செய்து வாசிக்க எழுத பேச பரீட்சை மூலம் தெரிவாக வேண்டியிருந்தது. சிங்களப் பிரதேசங்கள் அதிகமென்பதால் தமிழைவிட சிங்களத்தையே பலர் கற்றனர். எனினும், தமிழ்ப் பகுதிகளுக்கு அதிகாரிகள் மிகவும் குறைந்ததால் சிங்களம் கற்றோரையும் அனுப்ப வேண்டியிருந்தது.அதனால்,1832 முதல் சிங்களமும் தமிழும் சமமாகக் கற்று திறமை பெற்றிருக்கவேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது.

விண்ணப்பத்துக்கான வயது 16 முதல் 22 என்றும் உரிய தகுதியாக பரீட்சையில் சித்தி என்றும் வகுக்கப்பட்டது. 'ரைட்டர்' எனும் எழுத்து உத்தியோகம்

செய்யும் அதிகாரமும் ஆளுநருக்கிருந்தது.அரச சார்பான மக்கள் தொடர்புகளை திறமையான வயது முதிர்ந்த அதிகாரிகளையே அவர் தெரிவுசெய்தார். 1920 முதல் லோகல் டிவிஷன் ரத்தாகி சிவில் சேவை ஒரே தரமாக்கப்பட்டது. இந்தியப் பரீட்சையும்கூட இலங்கையிலும் இங்கிலாந்திலும் நிகழ்ந்தது. 1932 இற்குப் பின்னர் லண்டன் பல்கலைக்கழகத்தில் கௌரவ அல்லது சாதாரண பட்டப் படிப்போ அதற்குச் சமமான தகுதியோ உள்ளவர்க்கு மட்டுமே என்றாகியது. பின்னர் இங்கிலாந்தில் பரீட்சை எழுதும் முறை ரத்தாகியது. 1948 இல் இலங்கைக்கு 'டொமினியன்' சுதந்திரம் வழங்கப் பட்டதும்இலங்கையரால் பதவிகள்







ஊக்கமளிக்கப்பட்டது. எனவே, அநேகர் கோப்பிச்செய்கையில் ஈடுபட்டனர். சம்பளக்குறைவை சமாளிக்க அவ்வாறு செய்ய வேண்டியிருந்தது. அரச ஊழியர் வர்த்தகம் செய்யக்கூடாது என்றாலும் தோட்ட உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதியாவதால் கிடைக்கும் வரி மூலம் வரவு செலவுத்திட்டத்தைச் சமாளிக்கலாம் என்பதற்காக அனுமதிக்கப்பட்டனர். எனினும், காலத்தை அதற்கே அதிகம் அவர்கள் செலவழித்ததால் சிவில் சேவைப்பொறுப்பு பலமுறை தடைப்பட்டது.



உருவாக்கப்பட்டு ஆங்கிலேய மற்றும் உள்ளூர் திறமைசாலிகளுக்கு பரீட்சை மூலம் நியமனம் வழங்கப்பட்டது.பின்னர்அவர்கள் சிவில் சேவை அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டார்கள். 1856 முதல் இப்பரீட்சை நடத்தப்பட்டு வந்தது.

### ரைட்டர் பரீட்சை

1863 இல் இலங்கையில் இப்பரீட்சை நடத்தப்பட்டது.எனினும், இங்குள்ள நடைமுறை பிரச்சினைகள் காரணமாக 1880 இற்குப் பின்னர் 'ரைட்டர்' பரீட்சை இலங்கையில் ரத்தாகி

நிரப்பட்டன. எனினும், அமைச்சுக்களின் நிரந்தர செயலாளர் பதவியே அவர்களுக்கு ஒதுக்கப்பட்டது.

பின்னர் 1972 குடியரசு யாப்பு மூலம் அது 'பரிபாலன சேவை'எனப் பெயர்பெற்றது. தற்போது 'லங்கா பரிபாலன சேவை' என்றும் 'அரச பரிபாலன சேவை' கல்விப்பரிபாலன சேவை என்றும் பிரிக்கப்பட்டு பரீட்சை நடத்தப்பட்டது. வைத்தியர், பொறியியலாளர், ராணுவத்தினர், பொலிஸார் ஆகியோரும் இப்பரிபாலன சேவையில் இணைக்கப்பட்டனர்.

**ஏ.ஜே.எம்.நிழாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீங்கள் கணினிப் பாவனையாளரா?

பலரும் தங்களது கணினியில் சிக்கல்கள் வரும்போது, அது மிகச் சாதாரணமானதாக இருந்தால்கூட, தங்களது வழமையான கணினி திருத்துனரிடம் தொடர்புகொண்டு அதைச் சீர்செய்து கொள்வதுடன், அந்த சிக்கல்கள் குறித்து அறிந்து வைத்துக்கொள்ளக்கூட ஆர்வம் காட்டுவதில்லை. உண்மையில், கணினியைப் பாவிக்கும்போது ஏற்படக்கூடிய நடைமுறைச் சிக்கல்களில் 75% ஆனவை பாவனையாளரால் சுயமாக தீர்த்துக்கொள்ளக்கூடியவை ஆகும்.

கணினியில் ஒரு பிரச்சினை வரும்போது அதன் உரிமையாளருக்கு மிகவும் அவசியமானது பொறுமை ஒன்றே. பொதுவாக கணினிப் பாவனையாளர் தனது கணினியில் ஒரு பிரச்சினையை எதிர்நோக்கியதும் அது என்ன பிரச்சினை என்பதை கணினியே ஒரு சிறிய கட்டத்துக்குள் சுட்டிக்காட்டும். அதை வாசித்தாலே போதும்; கணினியின் பிரச்சினை என்ன என்பது உங்களுக்கு நன்கு புரிந்துவிடும். இதன்போது, மிகவும் அடிப்படையானதும் முக்கியமானதுமான ஒரு விடயம் கணினியுலகில் பயன்பாட்டிலுள்ள சொற்களைத் தெரிந்து வைத்திருப்பதுதான். உதாரணமாக, வன்பொருள் (Hardware), மென்பொருள் (Software) என்றால் என்ன என்று தெரிந்து வைத்திருந்தாலே தகவல் கட்டங்கள் (Dialog Box) கணினியின் பிழைகளை சுட்டிக்காட்டும்போது, எங்கே பிழை நேர்ந்துள்ளது என்பதை ஓரளவுக்கு விளங்கிக்கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்.

**கணினியைப் பாவிக்கும்போது ஏற்படக்கூடிய நடைமுறைச் சிக்கல்களில் 75% ஆனவை பாவனையாளரால் சுயமாக தீர்த்துக் கொள்ளக் கூடியவையே**

## வன்பொருள், மென்பொருள்

கண்ணால் பார்க்கவும் கையால் தொட்டு உணரக்கூடியதுமான கணினியின் பாகங்கள் அனைத்தும் வன்பொருளில் அடங்கும். உதாரணமாக, விசைத்தட்டு (Keyboard), கையசைவி/சுட்டி (Mouse), மொனிட்டர் (Monitor), கணிப்பொறி (Hard drive), பதிப்பான் (Printer), பதிவு செயலி (Scanner) உட்பட அத்தனை பாகங்களும் 'ஹார்ட்வெயார்' என்ற குடும்பத்தில் சேரும்.

அவ்வாறே, கணினியின் இயங்கு பகுதிகளை இயக்கும் மென்பொருட்களான வின்டோஸ், வேர்ட், எக்செல், றியல்பிளேயர், மீடியா பிளேயர், அவுட்லுக் இப்படிப்பட்டவை மென்பொருள் என்று அழைக்கப்படுகின்றன.




## பிரச்சினையை இனங்காணல்


பொதுவாக, கணினி இயங்காமைக்கு அல்லது ஏதாவது குழப்பங்கள் உருவாவதற்கு மேற்கூறிய இரண்டு பிரிவுகளில் ஏதாவது ஒன்றே காரணமாகிறது. அதனை விளக்கும் தகவல்கட்டம் திரையில் தோன்றியதும் அதை ஆறுதலாக வாசித்துப் பார்த்தால், மென்பொருளிலா அல்லது வன்பொருளிலா தவறு நேர்ந்துள்ளது என்பதை இலகுவாகக் கண்டுபிடித்து விடலாம். பிரச்சினை நேர்ந்திருப்பது ஹாட்வெயாரிலாக இருந்தால் வெளிப்பாகங்களையும் உபகரணங்களையும் துண்டித்து மீள இணைத்தோ அல்லது ஒவ்வொன்றாக சரிபார்த்தோ தடைகளை இலகுவாக சீர்செய்து கொள்ளலாம்.



அதுவே சொஃப்ட்வெயாரிலாக இருக்கும் பட்சத்தில், தவறு பற்றிய விளக்கத்தில் எந்த சொஃப்ட்வெயாரில் தவறு ஏற்பட்டுள்ளது என்பது சுட்டிக்காட்டப்பட்டிருக்கும். அந்தக் காரணத்தை வாசித்தறிந்தால், அதற்குரிய மென்பொருளைத் துண்டித்து, மீள இணைப்பதன் மூலமோ அல்லது அந்த மென்பொருளை முழுமையாக மூடிவிட்டு, மீளத்திறப்பதன் மூலமோ அல்லது எதுவும் சரிவராதநிலையில், அந்த மென்பொருளை கணினியிலிருந்து முற்றாக நீக்கிவிட்டு மீள உள்ளீடு (Re-install) செய்வதன் மூலமோ கணினியின் தற்காலிக சிக்கலை இலகுவாகத் தீர்த்துவிட வாய்ப்பு உருவாகும்.



அத்துடன், ஒரே அழுத்தியை மீண்டும் மீண்டும் அழுத்துவது, பல மென்பொருட்களை ஒரே நேரத்தில் திறப்பது அல்லது பாவிப்பது, வெவ்வேறு வகையான-ஒன்றுக்கொன்று ஒவ்வாத இயக்கிகளை ஒரே நேரத்தில் திறப்பது அல்லது பாவிப்பது என்று பல அடிப்படை பிழைகளை எம்மையறியாமல் செய்யும்போது, எமது செயற்பாட்டைப் புரிந்து கொள்ள முடியாமல் கணினி தடுமாறி, தன்னைப் பாதுகாத்துக் கொள்ள பிழையேற்பட்டதற்கான தகவல் கட்டங்களை (Error messages) ஒன்றன்பின் ஒன்றாகத் தரும். எனவே, அவசரப்படாமல் கணினியின் நடைமுறை வேகத்தோடு பயணிப்பது அவசியம்.



கணினிப் பாவனையாளர்களை அதிகமாகக் குழப்பமடைய வைக்கும் இன்னுமொரு அம்சம் 'கிருமி நிரல்கள் அல்லது வைரஸ்கள்' (Computer Virus). தகவல் தொழில்நுட்பத்தில் மிக அதிகமான குழப்பங்களை உருவாக்குவது இந்த கணினி வைரஸ்கள்தான். எனவே, இத்தகைய பாதிப்புக்களிலிருந்து கணினியைப் பாதுகாக்க நாம் எப்போதும் எதை Click செய்கின்றோம். ஏன் Click செய்கின்றோம், என்பதை வாசித்தறிந்து செய்யவேண்டும்.




-ஜெ.டிசோகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உறக்கத்தை ஏற்படுத்தும் தொலைபேசி



**உறக்கம் வராமல் அல்லல்படும் நோய்க்கு இன்சோம்நியா (Insomnia) என குறிப்பிடுவர். இந்த நோயால் அவதிப்படும் நோயாளிகளை இன்சோம்நியாக்கள் (Insomniacs) என அழைக்கின்றனர்.**

## நியூயோர்க் வாசிகளின் அதிர்ஷ்டம்

உறக்கம் வராதவர்கள் அமெரிக்காவின் நியூயோர்க் நகரவாசிகளாக இருந்தால் அதிர்ஷ்டசாலிகள்தான்! ஏனெனில், நியூயோர்க் நகரில் தூக்கம் வராதவர்களைத் தூங்க வைப்பதற்கென்று 'ஹிப்னாட்டிச' முறை பரவலாகப் பயன்பாட்டில் இருந்து வருகிறது. நியூயோர்க் தவிர பிற இடங்களில் வாழ்பவர்களுக்கும் இந்த வசதி வாய்ப்பு இப்பொழுது வந்துவிட்டது. ஆனால், தொலைபேசி செலவுதான் அதிகம்.

## டொன் டக்ளஸ்

தொலைபேசி மூலம் தூங்க வைக்கும் 'ஹிப்னாட்டிச' முறையை அறிமுகப்படுத்தியவர் டொன் டக்ளஸ் என்ற நரம்பியல் (Neurology) மற்றும் மனநோய் மருத்துவர் (Psychiatrist) தான். இந்த முறையின்படி மருத்துவர் டொன் டக்ளஸ் பேசிய எட்டு நிமிடம் ஓடக் கூடிய 'கெசட்' ஒன்றை ஓடவிடுகிறார்கள். அந்த ஒலிப்பதிவிலிருந்து வெளிவரும் குரல் ஒலியை உறக்கம் வராதவர்களை கேட்கச் செய்வர். இத்தொலைபேசி அழைப்பை சிலீப் லைன் (Sleep line) என ஆங்கிலத்தில் அழைக்கின்றனர்.

தூக்கம் வராதவர்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். குறிப்பிட்ட எண்ணிற்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திவிட்டு ரிசீவரைக் காதுக்கருகில் வைத்துக் கொண்டால் தூக்கம் கண்களை நிச்சயம் தழுவி விடும்.

## ஹிப்னாட்டிசக் குரல்

முதலில் தூங்க வசதியான, தமக்குப் பிடித்தமான ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளுமாறு தூக்கம் வராதவர்களிடம் கூறுகிறது இந்த தொலைபேசி. பின்னர் உடல் தசைகளை இறுக்கமின்றித் தளர்வாக வைத்துக்கொள்ளச் சொல்கிறது. பிறகு மெதுவாக மூச்சு விடச்சொல்கிறது.இவை சிகிச்சையின் முதல் படிகள். சிகிச்சையின்போது தொலைபேசிக் குரலின் ஒலி குறைந்து கொண்டே வருவது ஒரு விசேட அம்சமாகும். தொலைபேசியில் ஹிப்னாட்டிசக் குரல் ஒலி முடிவதற்குள் சிலர் தூங்கிவிடுவார்கள் என்றால் இம்முறையின் மகிமையை நன்கு புரிந்து கொள்ளலாம்.

## வேறு நோய்களுக்கும் இது போன்ற முயற்சி

ஐக்கிய அமெரிக்காவின் நியூயோர்க்கிலுள்ள 'லென்னாக்ஸ் ஹில்' மருத்துவமனையே இந்தத் தொலைபேசி 'ஹிப்னாட்டிச' முறையை நடத்துகிறது. இம்முறை நாளுக்கு நாள் பிரபலமடைந்து வருகிறது. எனவே, நித்திரை இல்லாத நோய்க்கு மட்டுமன்றி வேறு பிற நோய்களுக்கும் தேவையான விடயங்களை இதன்மூலம் தெரிவிக்கலாம். இது குறித்து மருத்துவத் துறையினர் மேலும் பல முறைகளைப் புகுத்தத் திட்டமிட்டுள்ளனர். இவ்வாறு நீரிழிவு நோய்க்கு ஒரு கெசட். காசநோய்க்கு ஒரு கெசட் இப்படிப் பல.

இந்த முறையின் மூலம் இந்த நோய்களுக்கு பூரண சிகிச்சை அளிக்கமுடியாவிட்டாலும் மருந்து, மாத்திரை, ஆகாரம், ஓய்வு போன்றவை தொடர்பான பயனுள்ள விடயங்களைத் தெரிவிக்கலாம்.

இந்தவகையான தொலைபேசி 'ஹிப்னாட்டிச' முறையால் தூக்க மாத்திரைகளுக்கு அடிமையாகின்றவர்களின் எண்ணிக்கை பெருமளவு குறைந்து வருவதாக அமெரிக்காவிலிருந்து வெளிவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**-இரஞ்சித் ஜெயகர்**





# நவீன உலகில் தனித்து வாழும் ஸுனி இனமக்கள்

நாகரிகமடைந்துள்ள இந்த உலகில் ஏனையோர்களுடன் சேராமல் தனித்து வாழ்கின்றனர் ஹுனி என்னும் பழங்குடி இனமக்கள். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பாலைவனங்கள் பலவற்றில் வாழ்ந்த ஓர் இன மக்களின் வழித் தோன்றல்களே. இவர்கள் என்று நம்பப் படுகின்றது. மெக்ஸிக்கோவுக்கு தெற்கே சுமார் 35 மைல் தூரத்தில் உள்ள ஒரு பகுதியில் இம்மக்கள் வாழ்கின்றனர். இவர்களின் சனத்தொகை சுமார் 6,000 ஆகும். இவர்களின் இனத்தின் பெயர் ஆஷிவி (A'Shiwi) அதாவது, 'சதை' என்பதாகும்.

ஸுனி என்னும் பெயர் ஸ்பானிய மொழியின் விளக்கம் தெரியாத சேர்க்கையாகும். வேறு மொழிகளுடன் தொடர்பு இல்லாத ஒரு மொழியையே இவர்கள் பேசுகின்றனர். இவர்கள் தங்களின் பாரம்பரிய சமயத்தைப் பின்பற்றி வருவதுடன் சமயச் சடங்குகள், பாரம்பரிய நடனம் கொண்டாட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

மந்தை வளர்ப்பில் ஈடுபட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டபோதிலும் தமது தனித்துவ வாழ்வில் ஏனையோரின் தலையீடு ஏற்படாதவகையில் வாழ்ந்து வருகின்றனர். பிரச்சினைகள், யுத்தங்கள் என எந்த விடயங்களிலும் தொடர்பு ஏற்படாதவகையில் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

ஸுனி இன மக்களைப் பொறுத்த வரையில் இவர்கள் ஏனைய பழங்குடி இனத்தவர்களிலும் வேறுபட்ட பழக்க வழக்கமுடையவர்களாக இருக்கின்றனர்.

ஸுனி இன மக்கள் வழிபடும் கடவுள்கள் அரிசோனா, நியூ மெக்ஸிகோ குளங்களில் வாழ்வதாக நம்புகின்றனர். இந்த இன மக்களின் வாழ்க்கை விசித்திரம் நிறைந்ததாகவே இருக்கின்றது. தானிய உற்பத்தி, மட்பாண்ட உற்பத்தி போன்றவற்றிலும் ஈடுபட்டு இவர்கள் தமது ஜீவனோபாயத்தைத் தேடிக் கொள்கின்றனர்.


## விஜய் சந்தா விபரம்

| கொழும்பில் வசிப்போர் (நேரடியாகப் பெறுவதற்கு) | கொழும்பிற்கு வெளியே வசிப்போர் (தபாலில் பெறுவதற்கு) |
|---|---|
| 6 மாதத்திற்கு - ரூபா 390/= | 6 மாதத்திற்கு - ரூபா 780/= |
| 1 வருடத்திற்கு - ரூபா 780/= | 1 வருடத்திற்கு - ரூபா 1560/= |

கீழ்காணும் கூப்பனை நிரப்புங்கள். (ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது.)

பெயர் - ..............................
..............................
முகவரி - ..............................
..............................
தொ.பேசி - ..............................
பத்திரிகையின் பெயர் - ..............................

விஜய் Subscription
For 6 Months/ 1 Year
(அவசியமற்றதை வெட்டிவிடவும்)
..............................
கையொப்பம்/திகதி

மேற் காணப்படும் விபரத்திற்கேற்ப பணத்தை தபாலகத்தில் காசுக்கட்டளையாகச் செலுத்தி குறித்த காசுக்கட்டளையை மாற்றக்கூடிய தபால் கந்தோர் - Slave Island Post Office என்று குறிப்பிடவும். குறித்த காசுக்கட்டளையையும் இங்கு நிரப்பப்பட்ட கூப்பனையும் ஒன்றாக இணைத்து பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்கவும்.

முகவரி:
**SUBSCRIPTION MANAGER,**
**Wijeya Newspapers Ltd.,**
**8, Hunupitiya Cross Road, Colombo-02**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பலஸ்தீன்

**அரசு:** பலஸ்தீன் தேசிய அதிகார சபை.
**ஜனாதிபதி** (2005): மஹ்மூத் அப்பாஸ்.
**பிரதமர்** (2007): சலாம் ஃபயாட்.

## அமைவிடம்

பலஸ்தீனத்தின் அமைவிடம் வரலாற்றுடன்கூடிய புவியியல் காரணிகளாக அமைந்துள்ளன. இதன் நிலப்பிரதேசம் புதிய இஸ்ரேல் நாட்டினால் சூழப்பட்டுள்ளது. மேற்குக் கரையோரம் ஜோர்தான் நதிக்கப்பால் சினாய் பிரதேசத்தில் ஒரு பகுதியை உள்ளடக்கியது. அது 'காஸா' பள்ளத்தாக்கு என அழைக்கப்படுகின்றது.

**மொத்தப் பரப்பு: மேற்குக்கரை**-2263 மைல் (5860 ச.கி.மீ);
**காஸா பள்ளத்தாக்கு**-139 ச.மைல் (360 ச.கி.மீ).
**உயரமான சிகரம்:** டால் அஸுர் 1,022 மீற்றர்;
**தாழ்ந்த மையம்:** சாக்கடல் - 412 மீற்றர்.
**சனத்தொகை** (2004): **மேற்குக்கரை** 2,535,927;
**காஸா பள்ளத்தாக்கு**-1,482,405.
**தலைநகர்:** தீர்மானிக்கப்படவில்லை.
**பெரிய நகரங்கள்:** ரமல்லாஹ், காஸா, ஹிப்ரோன், நெப்லஸ்.
**நாணயங்கள்:** புதிய இஸ்ரேலிய ஷிக்கல், ஜோர்தான் டினார், (மேற்குக் கரையில்) அமெரிக்க டொலர்கள்.
**மொழி:** அரபு, ஹீப்ரு, ஆங்கிலம்.
**இனங்கள்: மேற்குக்கரை** - பலஸ்தீன அரேபியரும் ஏனையோரும் 83%, யூதர்கள் 17%;



**காஸா பள்ளத்தாக்கு:** பலஸ்தீன அரேபியர்களும் ஏனையோரும் 99.4%, யூதர்கள் 0.6%.

**சமயங்கள்: மேற்குக்கரை** - இஸ்லாமியர் 75% (பெரும்பான்மையோர் சுன்னி முஸ்லிம்கள்), யூதர்கள் 17%, கிறிஸ்தவர்களும் ஏனையோரும் 8%;

**காஸா பள்ளத்தாக்கு:** இஸ்லாமியர் 98.7% (பெரும்பான்மையோர் சுன்னி முஸ்லிம்கள்), கிறிஸ்தவர்கள் 0.7, யூதர்கள் 0.6%.

**இணையத்தளக் குறியீடு:** .ps
**தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** +970

**காலநிலை:** இங்கு வசந்த காலம் மிகச்சிறந்த பருவகாலமாகும், கோடைகாலத்தில் சற்று வெப்பநிலை காணப்படும். மாரி காலத்தில் மிதமான காலநிலை நிலவும்.

**தேசிய சின்னங்கள்: மரம்**-olive, **பறவை**-Palestine Sunbird, (மிருகம், மலர், விளையாட்டு என்பன பிரகடனப்படுத்தப்படவில்லை).




## தேசிய கீதம்

Biladi Biladi
Biladi ya ardi ya arda al-judoud
Biladi Biladi
Biladi ya sha'bi ya sha'b
al-khuloud...என ஆரம்பமாகின்றது.

## வரலாறு

இப்பிரதேசம் 1923 செப்டெம்பர் 29 முதல் 1948 மே 14 வரை பிரித்தானியாவின் ஒரு மண்டலமாக இருந்தது. 1947 இல் ஐ.நா சபையின் தலையீட்டால் அரேபிய அரசு, யூத அரசு எனப்பிரிக்கப்பட்டது. அதன் பின் பலஸ்தீன விடுதலை இயக்கம் (Palestinian Liberation Organization) எனப்படும் பி.எல்.ஓ 1964 இல் உருவாக்கப்பட்டது. 1976 இல் பி.எல்.ஓ அரபு லீக்கின் ஓர் உறுப்பினரானது.

1993 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இஸ்ரேல், வரையறுக்கப்பட்ட பலஸ்தீன தன்னாட்சிக்கு அனுமதி வழங்கியது. செப்டெம்பர் 1993 இல் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தம் வொஷிங்டனில் கைச்சாத்தானது. 1994 மே மாதம் 13 ஆம் திகதி இஸ்ரேல், ஜெரிக்கோ பகுதியை பலஸ்தீன காவல்துறையிடம் ஒப்படைத்தது. தொடர்ந்து 1994, ஜூலை 5 இல் யசீர் அரபாத் பலஸ்தீன சுய அரசை நிறுவினார். 1996 ஜனவரியில் இவர் பலஸ்தீனர்களின் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் அதிபரானார். பெப்ரவரி 12 இல் பலஸ்தீன ஒதோரிட்டி (Authority) யின் அதிபராக அரபாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.


ஜனாதிபதி


பிரதமர்

1996, ஒக்டோபரில் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த பில் கிளின்டன் பிரதமர் நெதான்யாகு மற்றும் அரபாத் ஆகியோருக்கிடையே ஒரு பேச்சுவார்த்தைக்கு களம் அமைத்தார்.




ஒலிவ் அறுவடை

எனினும், 1997, ஜூலையில் ஜெருசலேம் சந்தைப் பகுதியில் நிகழ்ந்த குண்டுவெடிப்பை அடுத்து, பேச்சுவார்த்தை முறிவடைந்தது. இதன் பின்னர் 1999 ஒக்டோபரில் நெதான்யாகு, அரபாத் ஆகியோரிடையே ஏற்பட்ட இடைக்கால ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, மேற்குக் கரைப்பகுதியில் மேலும் சில பகுதிகள் பலஸ்தீனத்திற்குக் கிடைத்தன. 1999, மே மாதம் சுதந்திர பலஸ்தீன பிரகடனம் இஸ்ரேல் தேர்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. அதே ஆண்டு செப்டெம்பர் அளவில் குறித்த பிரகடனத்தை நடைமுறைப்படுத்தும் ஒப்பந்தம் கையெழுத்தானது. 2000 ஆம் ஆண்டின் இறுதியில் சுதந்திர பலஸ்தீனத்தை பிரகடனம் செய்யப்போவதாக அரபாத் அறிவித்தார்.

## கலாசாரம்

பலஸ்தீன கலாசாரமானது அரேபிய உலகைச் சார்ந்த லெபனான், சிரியா மற்றும் ஜோர்தான் நாட்டுக் கலாசாரத்தோடு மிகவும் நெருங்கிய தொடர்பை உடையது. கலை, இலக்கியம், இசை, அலங்காரம், ஆபரணம், சமையல் உள்ளிட்ட பல்வேறு கலாசார அம்சங்களில் மிகவும் பழைமையும் அனுபவமும் நிறைந்திருப்பதைக் காணலாம்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (1997): **பிரதான தொலைபேசிப் பாவனையாளர்** 95729. **வானொலி நிலையங்கள்** (2000):


கிறிஸ்து பிறப்பின் தேவாலயம் (Church of nativity)

**காஸா பள்ளத்தாக்கு** - எதுவுமில்லை; **மேற்குக்கரை:** AM 1. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்: காஸா பள்ளத்தாக்கு** - 2. **இணையத்தள வழங்குனர்கள்** (1997): **காஸா பள்ளத்தாக்கு**-3; **மேற்குக்கரை** -8. **இணையத்தளப் பாவனையாளர்** (2001):60,000.


தேசிய இலச்சினை

## போக்குவரத்து

**புகையிரதப்பாதைகள்: காஸா பள்ளத்தாக்கு**- இல்லை (இருந்த ஒரு வழியும் கைவிடப்பட்டு அதற்கான சிறு அடையாளம் காணப்படுகின்றது). **பெருந்தெருக்கள்:** மிகச்சிறிய அளவில் அபிவிருத்தி செய்யப்பட்ட பாதைக் கட்டமைப்பொன்று உண்டு. மேற்குக் கரையில் பெருந்தெருக்களின் மொத்த நீளம் 4500 கி.மீற்றர். **துறையும் துறைமுகமும்:** காஸா பள்ளத்தாக்கு மற்றும் மேற்குக்கரை ஆகிய இரு பிரதேசங்களிலும் இல்லை. **விமான நிலையங்கள்** (2002): **காஸா பள்ளத்தாக்கு**-2; **மேற்குக்கரை**-3.

## பொருளாதாரம்

**காஸா பள்ளத்தாக்கு-விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம்: 29%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** ஒலிவ், காய்கறிகள், இறைச்சி, பாற்பண்ணை உற்பத்திகள். **தொழிலாளர் தொகை** (ஏப்ரல்-ஜூன் 2005): 278,000 (விவசாயம் 11.9%, கைத்


மேற்கத்தியச் சுவர்

தொழில் 18%, சேவைகள் 70.1%). **வேலையற்றோர்** (ஜனவரி-செப்.2005):19.9% (மேற்குக்கரை உட்பட). **கைத்தொழில்கள்:** சிறிய அளவில் குடும்ப வர்த்தகமாக சீமெந்து, புடவை வகைகள், சவர்க்காரம், வாசனைத்திரவங்கள், முத்து பதிக்கப்பட்ட ஆபரணங்கள். **இயற்கை வளங்கள்:** பயிர்ச்செய்கை நிலம், இயற்கை வாயு. **ஏற்றுமதிகள்:** மலர்கள், புடவை வகைகள்,ஒலிவ், பழங்கள், மரக்கறி வகைகள். **இறக்குமதிகள்:** உணவு வகை, நுகர்வுப் பொருட்கள், கட்டடப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்:** இஸ்ரேல்,எகிப்து, மேற்குக்கரை.

**மேற்குக்கரை-விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 16.9%) **மற்றும் விலங்கு வேளாண்மை:** ஒலிவ், காய்கறி வகைகள், இறைச்சி, பாற்பண்ணை உற்பத்திகள். **தொழிலாளர் தொகை** (ஏப்ரல்-ஜூன் 2005): 614,000 (விவசாயம் 18.4%, கைத்தொழில் 24%, சேவைகள் 57.6%). **இயற்கை வளம்:** பயிர்ச்செய்கை நிலம். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): இஸ்ரேல், ஜோர்தான், காஸா பள்ளத்தாக்கு.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

* அல்-அக்ஸா பள்ளிவாசல் * மேற்கத்தியச் சுவர் * இஸ்ரேல் அரும்பொருள் காட்சியகம் * கிறிஸ்து பிறப்பின் தேவாலயம் * சாக் கடல் * ஜோர்தான் சமவெளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வாண்டு நடைபெற்ற தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான வினாத்தாளின் ஒரு பகுதி

## புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் II - 2009

01. பின்வரும் பகுதியை வாசிக்க.

நான் பிறந்த சூழல் மிகவும் அழகான இயற்கைக் காட்சிகளைக் கொண்டது. பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற மலைத்தொடர்கள். இன்னிசைக் கீதம் இசைத்தபடி பாய்ந்து வரும் அருவி. நன்கு செழித்து வளர்ந்திருக்கும் மரங்கள். அவற்றிலே பழுத்து மணம் பரப்பும் கனிகள். அக்காட்சிகளைப் பார்த்து, கனிகளை உண்டு நான் உல்லாசமாகப் பறந்து கொண்டிருப்பேன்.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

(i) இங்கு கீதம் இசைத்து வருவது யாது? ..........

(ii) செயற்கை என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல் யாது? ..........

(iii) பழங்கள் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........

(vi) மரம் என்ற சொல்லின் பன்மைப் பெயர்ச்சொல்லை எழுதுக. ..........

(v) இங்கு இடம்பெறும் உவமானத்தை எழுதுக. ..........

(vi) மேற்குறித்த விவரம் எத்தகைய இடம் பற்றியது? ..........

02. அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து வெற்றிடத்தை நிரப்புக.

(i) ஒளியைப் பரப்புவது .......... (விளக்கு, விலக்கு)

(ii) மாணவர் தமது .......... களைச் சிறப்பாகச் செய்தனர். (பனி, பணி)

03. (i) பின்வரும் வாக்கியத்தை ஒருமையாக மாற்றி எழுதுக.

பறவைகள் ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளன. ..........

(ii) பின்வரும் வாக்கியத்தைப் பன்மையாக மாற்றி எழுதுக.

நட்சத்திரம் வானில் மின்னுகின்றது..........

04. பின்வரும் ஒவ்வொரு மரபுத் தொடரினதும் கருத்தை எழுதுக.

(i) நட்டாற்றில் விடல் ..........

(ii) கண்ணும் கருத்துமாய் இருத்தல் ..........

05. பின்வரும் தொடர்களுக்குரிய தனிச்சொல்லை எழுதுக.

(i) தன் நாட்டை நேசிப்பவன்: ..........

(ii) தன்னுடைய நன்மைக்காக மாத்திரம் செயற்படுபவன்: ..........

(iii) மனிதர்களை ஆற்றின் அக்கரைக்கு கொண்டு செல்பவன்: ..........

06. பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.

(i) ஐயோ முதலாளி அகப்பட்டாரா

(ii) நண்பனே கோபிக்க வேண்டாம்

07. சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.

குளம்/ஆகியவற்றில்/கழிவுகளை/ஆறு/மாசு/இடும்போது/குட்டை/அடையும்/நீர்வளம்

..........

..........

08. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

(i) உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.

..........

(ii) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

..........

09. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

(i) காலை .......... (ii) மாலை ..........

(iii) இரவு ..........

10. கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Be careful: ..........

(ii) What is this?: ..........

(iii) I am drinking water: ..........

11. பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) மெய மகே பு(ட்)டுவ : ..........

(ii) கிரி, சுது பாட்டய : ..........

12. பின்வரும் பூக்களில் மாலை நேரத்தில் மலரும் பூ;

(1) நந்தியாவட்டை (2) குவளை

(3) பவளமல்லிகை (4) அந்திமந்தாரை

13. இரவில் திரியும் பறவையாக அமையாதது;

(1) கோட்டான் (2) சாக்குருவி

(3) இரட்டைச்சொண்டுக் குருவி

(4) ஆந்தை

14. பழச் செய்கைக்குப் பெரும்பாலும் தீங்கு விளைவிக்கும் பிராணி;

(1) கரப்பான் (2) வெண்மூட்டுப் பூச்சி (3) மயிர்கொட்டி (4) சிலந்தி

15. தொலைவில் உள்ள இரையைக் கண்டு அதனைப் பிடிக்கும் ஆற்றல் கூடுதலாக உள்ள பறவை;

(1) கொக்கு (2) பருந்து (3) கழுகு (4) மழைக்குருவி

16. பயிர்களை வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும் மாற்று முறைகளில் அநுகூலமாக அமையாதது;

(1) எளிதாகப் பராமரிக்கத்தக்கதாக இருத்தல்.

(2) வெயில், மழை ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கத்தக்கதாக இருத்தல்.

(3) தேவைப்படும்போது அங்கும் இங்கும் மாற்றக்கூடியதாக இருத்தல்.

(4) இடவசதி உள்ள இடத்தில் மாத்திரம் பயிரிடத்தக்கதாக இருத்தல்.

17. வீட்டுத் தோட்டத்தில் பயிர்ச்செய்கைக்குத் தீங்கு விளைவிக்கும் பூச்சிகள் வருவதைத் தடுப்பதற்கு வளர்க்கப்படும் தாவரம்;

(1) துளசி (2) நாயுண்ணி (3) காவட்டம் புல் (4) செவ்வந்தி

18. உடல் வளர்ச்சியில் பெரிதும் செல்வாக்குச் செலுத்தும் உணவுச்சோடி;

(1) பசுப் பாலும் தோடம்பழச் சாறும் (2) முட்டையும் குரக்கன் ரொட்டியும்

(3) பயறும் சோயா அவரையும் (4) சோயா அவரையும் பசளியும்

19. கஞ்சி தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் இலை வகையாக அமையாதது;

(1) வல்லாரை (2) சிறுநாரத்தை இலை

(3) கோப்பை இலை (4) வட்டுக்கத்தரி இலை

20. பிளாத்திக்கு கோப்பையில் அடைக்கப்பட்ட யோகட்டை உண்பதற்கு முன்பாக விசேடமாகக் கவனத்தில் கொள்ள வேண்டியது;

(1) அடைக்கப்பட்ட தேதி (2) காலாவதியாகும் தேதி

(3) அடங்கும் பொருள் (4) தரநிர்ணய இலச்சினை

21. சோறு சமைப்பதற்காக அரிசியைக் களைவதற்கு மிகப் பொருத்தமான பாத்திரம்;

(1) மட்கோப்பை (2) பானை

(3) அரிக்குஞ்சட்டி (4) பெரிய மட்பானை

22. இக்குறியீடு குறிப்பது;



(1) கர்ப்பிணித் தாயை

(2) வலது குறைந்தவரை

(3) வயது வந்தவரை (4) பிள்ளையை

23. அரசாங்க நிறுவகங்களினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பான தகவலை அறிவதற்குத் தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி எண்;

(1) 118 (2) 119 (3) 1231 (4) 1919

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

## புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள் II - 2009 விடைகள்

*01.* (i) அருவி/பாய்ந்து வரும் அருவி/ கீதம் இசைத்தபடி பாய்ந்து வரும் அருவி

(ii) இயற்கை (iii) கனிகள் (iv) மரங்கள்

(v) பச்சைக் கம்பளம்/பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற/பச்சைக் கம்பளம் விரித்தது

(vi) மலைத்தொடர்/இயற்கை சூழல்/மலைநாடு/மலைப்பிரதேசம்

*02.* (i) விளக்கு (ii) பணி

*03.* (i) பறவை ஆழ்ந்த உறக்கத்தில் உள்ளது. (ii) நட்சத்திரங்கள் வானில் மின்னுகின்றன.

*04.* (i) ஆபத்தில் கைவிடல்/ஆபத்து ஏற்படும்போது உதவி செய்யாது விடல்

(ii) மிகவும் அவதானமாக இருத்தல்/கண்ணாயிருத்தல்/அதிகம் கவனமாக இருத்தல்/கவனமாக இருத்தல்/அவதானமாக இருத்தல்

*05.* (i) தேசாபிமானி/நாட்டுப்பற்றாளன்/நாட்டுப்பற்று உடையவன்

(ii) சுயநலவாதி/தன்னலவாதி

(iii) படகோட்டி/ஓடக்காரன்/தோணிக்காரன்/வள்ளக்காரன்

*06.* (i) ஐயோ! முதலாளி அகப்பட்டாரா? (ii) நண்பனே, கோபிக்கவேண்டாம்.

*07.* ★ ஆறு, குளம், குட்டை ஆகியவற்றில் கழிவுகளை இடும்போது நீர்வளம் மாசு அடையும்.

★ நீர்வளம் ஆறு, குளம், குட்டை ஆகியவற்றில் கழிவுகளை இடும்போது மாசு அடையும்.

★ கழிவுகளை ஆறு, குளம், குட்டை ஆகியவற்றில் இடும்போது நீர்வளம் மாசு அடையும்.

*08.* (i) உலோபங் கூடாது (ii) விடாமுயற்சி பலன் தரும்/விடாமுயற்சி/முயற்சி

*09.* (i) MORNING/morning

(ii) EVENING/evening/AFTERNOON/afternoon (iii) NIGHT/night

*10.* (i) கவனமாக இருங்கள்/ கவனமாக இரு/ கவனமாக இருக்கவும் (ii) இது என்ன?

(iii) நான் நீர் குடிக்கிறேன்/நான் தண்ணீர் குடிக்கிறேன்

நான் நீர் பருகுகிறேன்/நான் தண்ணீர் பருகுகிறேன்

நான் நீர் அருந்துகிறேன்/நான் தண்ணீர் அருந்துகிறேன்

*11.* (i) இது எனது கதிரை/இது என்னுடைய கதிரை/இது என் கதிரை/ இது எனது நாற்காலி/இது எனது நாற்காலி/இது என்னுடைய நாற்காலி

(ii) பால் வெள்ளை நிறம்/பால் வெள்ளை நிறமானது/பால் வெண்ணிறமானது

| | | | |
|---|---|---|---|
| *12. (4)* | *13. (3)* | *14. (2)* | *15. (2) அல்லது (3)* |
| *16. (4)* | *17. (4)* | *18. (3)* | *19. (3)* |
| *20. (2)* | *21. (3)* | *22. (2)* | *23. (4)* |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்குகள் ஊடான எதி

**விலங்குகள் சூழலுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டுள்ளன. இதனால், சூழலில் ஏற்படும் சிறிய-நுல்லியமான மாற்றங்களையும்கூட அவை மிக எளிதில் உணர்ந்துகொள்கின்றன. விலங்குகளின் எதிர்வுகூறல்கள் பழங்காலம் தொட்டு மனிதர்களாலும் அவதானிக்கப்பட்டு வருகின்றன. சுபமான, அசுபமான நிகழ்வுகளுக்கான எதிர்வுகூறல்களாகவே அவை கருதப்பட்டன**

அந்தவகையில், பழங்காலம் தொட்டு இன்றுவரை கிராமப்புற மக்களே விலங்குகளுடன் நெருங்கிய தொடர்பினைப் பேணி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. அவர்கள் விலங்குகளின் நடத்தைகள், ஒலிகள் எழுப்பப்படுகின்ற தொனிகள் என்பன பற்றி அறிந்துள்ளதுடன், அவற்றின் ஊடான எதிர்வுகூறல்களையும் அறிந்து வைத்துள்ளனர்.

## கூவும் சேவல்



சேவல் பெரும்பாலும் விடியற்காலையிலேயே கூவுகின்றது. ஒரு சேவல் கூவும்போது அதற்கு பதில் அளிக்கும் விதமாக பிற சேவல்களும் கூவுகின்றன. இதனால், அதிகாலையில் நாம் விழித்தெழுவதற்கு சேவலின் கூவும் சத்தம் உதவுகின்றது. நகர்ப்புறங்களில் இந்த நிலை அரிதானாலும் கிராமப்புறங் களில் சேவலின் கூவல் மக்க ளுக்கு பெரிதும் உதவுவதாக அமைந்துள்ளது. பயணம் செல்ல முற்படும்போது சேவல் கூவினால் அது நல்ல சகுனம் என்று கிராமிய மக்கள் நம்புகின்றனர். அதுவே பகல்பொழுதில் சேவல் கூவுவது அந்தளவுக்கு நல்லதன்று என்றும் கருதப்படுகின்றது. அவ்வாறே, சில வேளைகளில் கோழிகள் கொக்கரிக்கும் சத்தத்தையும் நாம் கேட்கின்றோம். எனினும், கோழிகளின் கொக்கரிப்பு மிகவும் அசுபமானவை என்ற கருத்துக்களும் நிலவுகின்றன.

## கழுகுகள் வட்டமிடல்



கழுகுகள் வானில் மிக உயரத்திலேயே பறக்கின்றன. கழுகொன்று சத்தமிட்டவாறு வானில் வட்டமடித்துக் கொண்டிருந்தால், அது மழை பெய்வதற்கான முன் அறிகுறியாக கிராமிய மக்கள் கருதினர்.

அத்துடன், கழுகுகள் பல பகல்பொழுதில் கூட்டமாக வானில் வட்டமடித்துக் கொண்டிருந்தால், மழை விரைவில் பொழியப் போகின்றது என்றும் அவர்கள் அர்த்தம் கொண்டனர்.

## முக்காரமிடும் காட்டெருமை

காட்டெருமையானது காடுகளில் வாழும் கொடிய விலங்கினமாகக் கருதப்படுகின்றது. இது துரத்தி வந்து தாக்கக்கூடியது. எனவே, காடுகளி னூடாக பயணம் செய்யும்போது இதனைத் தவிர்த்து விட்டுச் செல்வதே நன்று. கூட்டத்திடமிருந்து பிரிந்து தனித்து இருக்கும் ஒரு காட்டெருமை யும் குட்டிகளுடன் வாழும் காட்டெருமையும் மிகவும் கொடியதாகக் காணப்படும். அவை எழுப்பும் தொனியை வைத்து அதனை இனங்கண்டு கொள்ளலாம்.

## காகம் கரையும் சாத்திரம்




மாலை வேளையில் வீட்டு வாசலுக்கு அருகாமையில் இருக்கும் மரத்தில் காய்ந்து போன கிளையொன்றின் மீது அமர்ந்து காகம் கரைந்தால், அது யாரோ ஒருவரின் மரணச் செய்தி அறியக்கிடைக்க வுள்ளதாக அர்த்தம் கொள்ளப்படுகின்றது. ஆனால், காலைப்பொழுதில் மரக்கிளை யொன்றில் இருந்தவாறு வீட்டு வாசலை நோக்கிக் கரைந்தால், அன்றைய தினம் குறித்த வீட்டுக்கு விருந்தினர்கள் வருவார்கள் என்று அர்த்தம் கொள்ளப்படு கின்றது. அத்துடன், காகங்கள் ஒன்றாகக் கூடிக் கரையும்போது, அவற்றுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்துள்ளது என்று அர்த்தப்படுகின்றது.

## கொரவக்கனின் தொனி




இப்பறவை தனக்கு ஏற்படக் கூடிய ஆபத்துக்கள் பற்றி எப்பொழுதும் முன்னெச்சரிக் கையுடன் இருக்கும். இது இரவில் திடீரென வானில் பறந்துகொண்டே கீச்சிட்டால், ஏதோ காட்டு விலங்கினங்கள் வந்திருக்கின்றன என்று அர்த்தம் கொள்ளப்படும். தனித்த யானையொன்றைக் கண்டவுடன் இப்பறவை தீர்க்கமாகக் குரல் கொடுக்கும். இதன் கீச்சிடலைக்கொண்டு விளைநிலங்களுக்குள் விலங்குகள் வந்திருப்பதனை கிராமிய மக்கள் அறிந்துகொள்கின்றனர்.

## மான்களின் கத்தல்



கூட்டத்திலிருந்து தனிமைப்பட்டாலோ அல்லது ஆபத்தினை எதிர்நோக்கி யிருந்தாலோ பொதுவாக மான் கத்தத் தொடங்கும். புலி அல்லது சிறுத்தை களிடம் அகப்பட்டவுடன் மான் கத்தும் தொனி வித்தியாசமாக இருக்கும். அதன்போது, குறித்த சத்தம் எழுப்பப்படுகின்ற திசையைத் தவிர்த்து விட்டு வேறு திசையில் செல்வது சிறந்ததாகும்.

## நாய்களின் குரைப்பு



பண்டைய காலம் முதல் நாய், மனிதனின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் விலங்காக உள்ளது. இதற்கு சிறந்த மோப்ப சக்தியும் உண்டு. இதனால், சூழலில் ஏற்படும் சிறிய மாற்றங்களையும் உணர்வுகளையும் அவை உணர்ந்துகொள்கின்றன. நாய்கள் குரைக்கும் தொனியினைக்கொண்டு எதற்காக அவை குரைக்கின்றன என்பதனை கிராமிய மக்கள் தம் அனுபவத்தின் ஊடாக அறிவர். அதன்படி, நாயொன்று வேகமாகக் குரைத்தவாறு பாய்ந்து கடிப்பதற்கு முற்படுவதாக இருக்கு மாயின், அது திருடர்கள் அல்லது எதிரிகளைக் கண்டிருக்கலாம் என அர்த்தப்படும். அத்துடன், நாய்கள் ஊளையிடுவது அசுப நிகழ்வுக்கான முன்னறிவிப்பு என்றும் இரவு நேரத்தில் அவ்வாறு செய்யுமாயின், யாருடையதேனும் மரணச் செய்தி கிடைக்கப் போவதாகவும் நம்பப்படுகின்றது.




## கேரலாவின் கீ

இதன் ஒலி மிகவும் அசுபமானதாகவே கிராமி
இதனால், இந்த ஒலியை அவர்கள் வெறுக்கின்ற
விட்டு வெளியேறும்போது கேரலா கீச்சிடுவதும்
மேற்கொள்ளும்போது குரல் எழுப்புவதும் நல்
எனினும், அசுபமான சந்தர்ப்பங்களை எதிர்வுகூ
இனங்காணப்படுவதால், இப்பறவைக்கு கெடுத
கிராமத்தவர்கள் எவரும் முன்வருவதில்லை.

## மைனா




மைன
உட்கொ
காட்டுகி
வயல்வெ
அவ்வய
நெற்பயி
ஆளாகி
அதன்ப
நடவடிக்
ஈடுபடுவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ர்வுகூறல்கள்




## ...ின் கீச்சிடல்

...வே கிராமிய மக்கள் கருதுகின்றனர். ...வறுக்கின்றனர். சுப காரியத்திற்காக வீட்டை ...ச்சிடுவதும் சுப காரியங்களை ...வதும் நல்லதன்று என்று கருதப்படுகின்றது. ...ா எதிர்வுகூறுகின்ற பறவையாக இது ...க்கு கெடுதல்களைச் செய்வதற்கு ...ில்லை.

## ...மைனாக்கள் கூட்டம்

மைனாக்கள் புழுக்களை உட்கொள்வதில் அலாதிப் பிரியம் காட்டுகின்றன. மைனாக்கள் கூட்டமாக வயல்வெளிக்கு வருகின்றன எனின், அவ்வயல்வெளியில் உள்ள நெற்பயிர்கள் புழுக்களின் தாக்கத்துக்கு ஆளாகியிருப்பதாகக் கருதப்படுகின்றது. அதன்படி, அவற்றை அழிப்பதற்கான நடவடிக்கைகளில் விவசாயிகள் ஈடுபடுவர்.



## உறுமல்கள்

புலி, கரடி, சிங்கம் ஆகிய விலங்குகள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வெவ்வேறு விதமான உறுமல்களை வெளிப்படுத்துகின்றன. புலிகள் எந்நேரமும் மனிதர்களைத் தாக்குவதில்லை. மனிதர்களும் அவற்றை பெருமளவில் தவிர்த்துச் செல்கின்றனர். எனினும், மனிதரை நேருக்குநேர் எதிர்கொண்டவுடன் பற்களைக் காட்டி, உறுமுவது அபாயகரமானது. காடுகளினூடாகப் பயணிக்கும்போது உறுமும் தொனிகளை வைத்து உறுமுகின்ற விலங்கு எது, உறுமல் வரும் திசை எது என்பன பற்றி கிராமிய மக்கள் தம் அனுபவங்களின் ஊடாக நன்கு அறிந்து வைத்துள்ளனர்.



## யானையின் பிளிறல்



சூழ்நிலைகளுக்கு ஏற்ப யானையின் பிளிறலும் வேறுபடும். தனித்திருக்கும் யானை வித்தியாசமாகப் பிளிறும். யானையொன்று மற்றுமொரு யானையுடன் சண்டையிடும்போதும் அச்சண்டையில் வெற்றி பெற்ற பின்னரும் பிளிறும் சத்தம் வேறுபடும். கிராமிய மக்கள் காடுகளுக்கு விறகுகள் வெட்டச் செல்லும்போது, தேன் சேகரிக்கச் செல்லும்போது, மூலிகை செடிகளை பறிக்கச் செல்லும்போது யானைகள் பிளிறும் தொனியை வைத்து யானைகள் இருக்கும் இடம், அதன் இயல்பு பற்றி நன்கு அறிந்து கொள்வர். தும்பிக்கையைத் தூக்கி, உச்சத்தொனியில் பிளிறினால் யானை கோபமடைந்துள்ளது என்று அர்த்தமாகும். அவ்வாறான யானைகளே மனிதர்களைத் தாக்கும் இயல்புகளைக் கொண்டுள்ளன.

## கீச்சிடும் அணில்



அணில் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படும் ஓர் உயிரினம். வீட்டுச் சூழலில் உள்ள உயிரினம் என்பதால் அதன் கீச்சிடும் ஒலியை வைத்து பலவற்றை உணரமுடியும். உதாரணமாக, தமக்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய பாம்புகள் போன்ற உயிரினங்களைக் கண்டவுடன் அணில்கள் உச்சத்தொனியில் கீச்சிடுகின்றன. எனவே, அந்தத் தொனியில் அணில்கள் கீச்சிடும்போது அது குறித்து அக்கறை காட்ட கிராமிய மக்கள் தவறுவதில்லை.

எதை, எங்கு படிச்சாலும்
ENGLISH ஐ யும் சேர்த்து படிங்க.

Nithya's English Home Study Pack வீட்டிலிருந்தே ஆங்கிலம் கற்க இலகு வழி

இலங்கையில் முன்னனி தொலைக் கல்வி நிலையமான JEI கல்வி நிலையம் தமிழ் மக்களின் ஆங்கில கல்வி வளர்ச்சியில் கவனம் கொண்டு ஆங்கில கற்கை பொதி ஒன்றை அறிமுகம் செய்கிறது. சரளமாக ஆங்கிலத்தில் எழுத,பேச,வாசிக்க 45 நாட்களில் வீட்டிலிருந்தவாரே பயிற்சி பெ
ENGLISH HOME STUDY PACK

யாருக்காக...?
★ வெளிநாடுகளுக்கு செல்ல இருப்பவர்களுக்கு
★ தொழில் வாய்ப்புகளை தேடுவோருக்கு
★ தொழில் புரிவோருக்கு ★ இல்லத்தரசிகளுக்கு
★ 8 ம்ஆண்டுக்கு மேல் கல்வி பயிலும் மாணவர்களுக

பாடநெறி முடிவில்
DiP In English-L 1
சான்றிதழ்கள் வழங்கப்படும்.

Home Study Pack
ஒன்றில் அடங்குபவை .....?

★ 12 ஆங்கில பேச்சு பயிற்சி புத்தகங்கள் (ஆங்கில பேச்சு பயிற்சி, இலக்கணம், கவிதைகள் குறுக்கெழுத்து போட்டி, கடிதம் எழுதுதல், சிறுகதைகள், கட்டுரைகள் உள்ளடக்கிய புத்தகம்)
★ ஆங்கில பேச்சு பயிற்சி Audio cd -1
★ CD Guide Book - CD வழி காட்டி புத்தகம்.
★ The Necklace Story Book த நெக்லஸ் சிறுகதை புத்தகம்.
★ Jei Logo Printed Bag, விசேடமாக தயாரிக்கப்பட்ட Bag
★ Answer Sheets விடை எழுதும் பத்திரங்கள்.

Home Study Pack
ஒன்றை பெறுவது எப்படி ?

நீங்கள் Study Pack ஐ பெற விரும்பின் VJ என -Type செய்து பின்னர் உங்கள் Name, Address, T.p.No.Age, என்பவற்றை
0777-806 606 SMS செய்யுங்கள்.
Study Pack அருகே இருக்கும் தபால் கந்தோருக்கு அனுப்பப்படும்.பின்னர் 1950/- செலுத்தி பெறலாம்.

வடக்கு- கிழக்கு மாணங்களில் வசிக்கும் மாணவர்களுக்கு விசேட கட்டண கழிவு.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு விசேட கட்டண கழிவாக ரு 300/- வழங்கப்படும்.வடக்கு-கிழக்கு மாகாணங்-களில் இருந்து விண்ணப்பிக்கும் மாணவர்கள் VJ-NE என Type செய்து பெயர் முகவரி வயது என்பவற்றை 0777-806 606 என்ற இலக்கத்திற்கு SMS செய்யவும்.

இலங்கையின் வேறு இடங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் 1950/- செலுத்த வேண்டும்.

12 பாடப் புத்தகங்களில் காணப்படும் பயிற்சிகளுக்கு விடைகளை எழுதி எமக்கு அனுப்ப வேண்டும்.

JEI INSTITUTE
P.O.BOX.119 KANDY.
0814-92 91 93



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நேர்மையும் நாட்டியமும்

முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை 'நிக்னாஸ்' எனும் ஒரு மன்னன் ஆண்டு வந்தான். அவன் மிகுந்த திறமைசாலி. எனவே, அவனுடைய அவையில் இருப்போரும் அரச பணிகளில் ஈடுபடுவோரும் அவனைப் போலவே திறமைசாலிகளாக, அதி திறமைசாலிகளாக இருக்கவேண்டுமென்று விரும்பினான். அத்துடன், அவன் அவர்களிடம் நீதி, நேர்மை, நியாயம் எல்லாவற்றையும் எதிர்பார்த்தான்.



இதன்படி, அவனது நாட்டின் புலவர்கள், நீதிவான்கள், அதிகாரிகள் எனஅனைவரும் மிகுந்த திறமைசாலிகளாக இருந்தனர். இவர்கள் அனைவரையும் அவன் விசேட சோதனை மூலமாகவே தேர்ந்தெடுத்தான். இப்படி இருக்க விதிவிலக்காக அந்நாட்டில் வரிவசூலிக்கும் அதிகாரிகள் மட்டும் தம் கைவரிசையைக் காட்டிவந்தனர். இதனால், அரசன் ஒரு நேர்மையான நிதி அதிகாரியை தேர்ந்தெடுக்க விரும்பி தனது அதிசிறந்த, ராஜதந்திரியிடம் அது பற்றி வினவினார். அதற்கு ராஜதந்திரி சிறிதும் கலக்கமின்றி "அரசே! இது மிகவும் சுலபமான காரியம். நான் நாளையே இந்நாட்டிலுள்ள மிக நேர்மையான ஒருவரை தங்கள் முன் கொண்டு வந்து நிறுத்துகிறேன் பாருங்கள்'' என்றார்.

அவ்வாறே மறுநாள் அனைத்து மனுதாரர்களும் அரசவையில் வந்து வீற்றிருந்தார்கள். அவர்களை நோக்கி ராஜதந்திரி, "நீங்கள் நாட்டியம் ஆடுங்கள். நீங்கள் அறிந்த அனைத்துவித நாட்டியங்களையும் ஆடுங்கள். குதித்துக் குதித்து ஆடுங்கள் உங்களில் யார் அரசர் மனங்கவரும் விதத்தில் ஆடுகிறீர்களோ, அவர்தான் தேர்ந்தெடுக்கப்படுவார்''

என்றறிவிக்கவே அரசர் எதுவும் புரியாமல் தடுமாறினார். ராஜதந்திரி கூறியதைக் கேட்டு அங்கு வீற்றிருந்த மனுதாரர்கள் மௌனமாக இருக்க ஒருவர் மட்டும் எழுந்து குதித்துக் குதித்து ஆடலானார். பின்னர் ராஜதந்திரி, "இவர் தான் எமது நாட்டிலேயே மிக நேர்மையானவர்'' என்று அரசரிடம் கூறினார்.

அதுகேட்டு கடுங்கோபமுற்ற அரசர், "இது என்ன? நான் நடனப் போட்டி நடத்தவா சொன்னேன்? இவனா நேர்மையானவன்?'' என்றெல்லாம் வினவினார்.

அதற்கு ராஜதந்திரி, "ஆம். அரசே... இவர்தான் நேர்மையானவர். மிகமிக நேர்மையானவர். ஏனெனில், இவர்கள் அனைவரையும் சிறிது நேரம் ஆங்காங்கே நிறைய பொற்காசுகள் நிரப்பப்பட்ட சாக்குகள் வைக்கப்பட்ட அறையொன்றில் தங்க வைத்திருந்தேன். என்னுடைய சோதனையில் அங்கிருந்து ஏராளமான பொற்காசுகள்



கையாடப்பட்டு இருப்பதையும் கண்டுகொண்டேன். நாட்டியமாடினால் பொற்காசுகள் சத்த மெழுப்பி அல்லது விழுந்து காட்டிக் கொடுத்துவிடுமல்லவா? அதனால்தான் மற்றவர்கள் யாரும் ஆடவில்லை'' என்று விளங்கப்படுத்தினார்.

உடனே ஆடாமல் இருந்தவர்களை சோதனையிட்டபோது அவர்கள் தம் இடுப்பிலும் உடைகளிலும் பொற்காசுகளை மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. திருட்டுக் குற்றத்துக்காக அவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட்டது. நேர்மையான ஒருவரை கண்டுபிடித்த மகிழ்ச்சியில் அரசர் நிக்னாஸ் ராஜதந்திரியை அவரின் புத்திக்கூர்மைக்காக வெகுவாகப் பாராட்டினார்.




ஏ.அர்ஷ் அஹமட், தரம் - 8,
கே/கோலை மு.ம.வித்., கேகாலை.

## சக்தி விரயமாகும் சந்தர்ப்பங்கள்



* சூரிய ஒளி போதிய அளவு இருக்கின்ற போதிலும் மின்குமிழ் ஒளியேற்றப் படுதல்.



* அடுப்புக்களில் இருந்து வெப்பம் அதிகளவில் பயனற்ற முறையில் வெளியேறுதல்.



* வாகனம் நிறுத்தப்பட்டுள்ள போதிலும்இயந்திரம் இயங்கிக் கொண்டிருப்பதால் எரிபொருள் விரயமாதல்.



* தரைமினுக்கி (Floor Polisher) அரைப்பான் (Grinder, Blender) போன்ற மின் சாதனங்களில் சக்திஅதிகளவில் விரயம் செய்யப்படுதல்.

நுஸ்ரா சித்தீக், தரம் - 8C,
முஸ்லிம் மகளிர் அரபுக் கல்.,
கள்ளளிய. (அட்டாளைச்சேனை)

# போஷாக்கும் தேகாரோக்கியமும்

நோயற்ற வாழ்வு மட்டுமல்லாது உடல், உள, சமூக நன்னிலையே ஆரோக்கியம் எனப்படுகிறது. போஷாக்கான உணவுகளை தேர்ந்து உண்பதன் மூலமே எமது உடலுக்கு போஷாக்கு கிடைக்கின்றது. நாம் உண்ணும் உணவில் பலவகையான சத்துக்கள் அடங்கியுள்ளன. இவற்றுள் ஐந்து வகைச் சத்துக்கள் மிக முக்கியமானதாகக் காணப்படுகின்றன.அவை; புரதம், மாப்பொருள், கொழுப்பு, உலோக உப்புக்கள், விற்றமின்கள் என்பனவாகும். இவற்றில் விற்றமின்கள் உணவுப் பொருட்களுடன் கலந்தே உள்ளன. இவை உடல் ஆரோக்கியத்திற்கு உதவுகின்றன. இவை உணவில் சேர்ந்திடாவிடில் உடல் நலம் கெடும். அத்துடன்,

புரதச் சத்தானது உடல் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமானதாகும். இது உடலின் உறுப்புக்களிலுள்ள நுண்ணறைகளையும் திசுக்களையும் பழுது பார்த்து புதுப்பிக்கின்றது. முக்கியமாக குழந்தைகள் வளருவதற்கு இது மிகவும் அவசியமானதாகும்.



இதனைப் பருப்பு வகைகள், கடலை வகைகள், பயறு வகைகள், மாமிசம், பேரீச்சை, அத்தி போன்வற்றில் இருந்து அதிகளவில் பெற்றுக் கொள்ளலாம். புரதச்சத்து குறைவடைந்தால் உடல் வலுக் குறைவடையும், உடல் வளர்ச்சி குன்றும், வேலை செய்யும் திறனும் குறைவடையும். எனவே, புரதச்சத்தானது எமது அன்றாட உணவில் குறையாமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.

மாப்பொருளானது உடலுக்குத் தேவையான சக்தியை அளிக்கின்றது. கொழுப்புச்சத்தானது மாப்பொருளை போன்றே உடலுக்கு சக்தியளிக்கின்றது. இதனை தாவரங்களின் விதைகள், எண்ணெய்கள், மாமிச உணவுகள் என்பவற்றிலிருந்து அதிகமாகப் பெற்றுக்கொள்ளமுடியும்.

எமது உடலில் பலவகை உலோகச் சத்துக்கள் உள்ளன. அவற்றில் முக்கியமானவையாக சுண்ணாம்புச்சத்து, பொஸ்பரஸ், பொட்டாசியம், கந்தகம், குளோரின், சோடியம், மெக்னீசியம், இரும்பு, மங்கனீஸ், அயடீன் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை பல் வளர்ச்சிக்கு உதவுவதுடன் அவற்றை வலுவுறவும் செய்கின்றன. அத்துடன், தசைகள், குருதி, திசுக்கள், நுண்ணறைகள் என்பவற்றுக்குத் தேவைப்படுவதுடன் உணவு ஜீரணிக்கவும் உதவுகின்றன.

விற்றமின்கள் நால்வகைச் சத்துக்களையும் உடலோடு ஒன்றச்செய்து உடலின் பல்வேறு செயற்பாடுகளையும் சரிவர இயங்கும்படி செய்யத்தூண்டுகின்றன.

உணவைப் பொறுத்தவரையில் பல் வகைச்சத்துக்களும் கலந்த உணவை அதாவது, கலப்புணவை உண்பது அவசியமாகும். அதேபோன்று தேகாரோக்கியத்திற்கு சத்துணவு மிகவும் அவசியமாகும். அத்துடன், முற்காலத்தில் வெளியில் சென்று வீடு திரும்பும் யாராக இருந்தாலும் அல்லது வீட்டுக்கு வரும் விருந்தாளியாக இருந்தாலும் வீட்டினுள் வரும்போதும் உணவு உண்ண முன்பும் பின்பும் கை, கால்களை சுத்தம் செய்வது வழக்கம். தற்காலத்தில் இதைப்போன்ற நடவடிக்கைகளை மூட நம்பிக்கை என ஏளனம் செய்வோரும் உள்ளனர்.

குளிப்பது, ஆடைகளை நன்கு சுத்தமாக கழுவி அணிவது, வீட்டையும் சுற்றுப்புறச் சூழலையும் சுத்தமாக வைப்பது, தினமும் உடற்பயிற்சி செய்வது போன்றன உடல் ஆரோக்கிய வளர்ச்சிக்கு மிக முக்கியமான வழிமுறைகளாகும்.

பி.மொனிக்கா கிஷாந்தி, உயர் தரம்,
கொ/புனித அன்னம்மாள் த.ம.ம.வித்.,
கொழும்பு-13.

## பிரபலமானோர் பற்றிய பிற விடயங்கள்

★ தனது வீரத்தால் பல வெற்றிகளைக் கண்ட மாவீரன் நெப்போலியனுக்குப் பூனைகள் என்றால் பயமாம்.
★ அறிவியல் மேதை ஐன்ஸ்டீனுக்கு 1952 இல் இஸ்ரேல் நாடு ஜனாதிபதிப் பதவியை வழங்க முன்வந்தபோது, அவர் அதனை ஏற்க மறுத்துவிட்டாராம்.
★ பிரபல நாவலாசிரியர் அலெக்சாண்டர் டூமாஸ் பத்திரிகைகளுக்கு நாவல் எழுதும்போது நீலத்தாளிலும் கவிதையை மஞ்சள் தாளிலும் கட்டுரையை இளஞ்சிவப்பு நிறத்தாளிலும் எழுதுவாராம்.
★ 'வானிட்டிஃபேர்' என்ற நாவல் மூலம் உலகப் புகழடைந்த வில்லியம் மேக்விஸ்தாக்கரே என்ற எழுத்தாளர் அந்த நாவலை இருந்து எழுதிய வீட்டைக் கடக்கும்போது தன் தொப்பியை எடுத்துவிட்டு அந்த வீட்டிற்குத் தலைவணங்குவாராம்.
★ ஐன்ஸ்டீன் குளிக்கும்போது குளியல் அறைக்கதவைத் தாழ் இடாமல்தான் குளிப்பாராம்.
★ மின்குமிழைக் கண்டுபிடித்த விஞ்ஞானி தோமஸ் அல்வா எடிசன் பாடசாலைக்குச் சென்றது மூன்றே மூன்று மாதங்கள்தானாம்.
★ அல்பர்ட் ஐன்ஸ்டீன் தனது 9 வயது வரையும் தங்குதடையின்றிப் பேசாததால், பெற்றோர் அவரை மூளை வளர்ச்சி குன்றியவராகக் கருதினாராம்.
★ வெலிங்டன் பிரபு நேரந்தவறாமையைக் கடைப்பிடிக்கும் காரணத்தால் தனது சட்டைப் பையில் எப்போதும் 6 கடிகாரங்களை வைத்திருப்பாராம். மருதமுனை.

என்.எப்.அய்மா, தரம் - 9B, கமு/அல்-ஹம்றா வித்., மருதமுனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழு நாட்களின் கதை

ஒரு வாரத்தில் ஏழு நாட்கள் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. ஆனால், இந்த ஏழு நாட்களுக்கும் (ஆங்கிலத்தில்) எவ்வாறு பெயர்கள் சூட்டப்பட்டன என்பது பலரும் அறியாத உண்மை. அந்தவகையில், ஸ்கெண்டிநேவிய நாட்டு அறிஞர்கள்தான் ஒரு வாரத்தின் ஒவ்வொரு நாளுக்கும் பெயர் சூட்டியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகுக்கெல்லாம் ஒளியைப் பரப்புவதோடு, அனைத்து உயிர்களையும் காக்கும் ஞாயிறுக்கு (சூரியன்) நன்றி செலுத்தும் விதமாக வாரத்தின் முதல் நாளை Sunday என்றும் அந்த சூரியனிடமிருந்து சக்தி பெற்று இரவில் ஒளிதரும் திங்களுக்கு (சந்திரன்) நன்றி கூறி இரண்டாம் நாளை Monday எனவும் ஸ்கெண்டிநேவியரின் போர்க்கடவுளான Tyrக்கு மரியாதை வழங்கும் வகையில் மூன்றாம் நாள் Tuesday என்றும் ஆனது. அத்துடன், அவர்களுடைய மன்னன்.பெயரான Wodin எனும் பெயரை நான்காம் நாளுக்கு Wednesday என்று பெயரிட்டனர். ஐந்தாம் நாள் அவர்களுடைய இடி கடவுளான Tor ஐ நினைவூட்டும் வகையில் Thursday என்றதோடு, அந்நாட்டு Frigg மகாராணியை சிறப்பிக்கும் வகையில் ஆறாம் நாளை Friday எனவும் கொண்டாடினார்கள். மேலும், அவர்களுடைய விவசாயக் கடவுளான Saturn ஐ ஞாபகப்படுத்தும்முகமாக ஏழாம் நாளை Saturday எனவும் பெயரிட்டனர். இதுதான் ஏழு நாட்களுக்கும் பெயர்கள் வந்த கதை.


அங்.இல: 3119
எஃப்.ரியானா, தரம் - 3F, எஸ்செப்தும் சுபார்த்தி க.வித்., குளியாப்பிட்டிய.


அங்.இல: 3120
எம்.முஸ்தாக், தரம் - 6, அல்-அக்ஸா தே.பாட., கல்பிட்டி.


அங்.இல: 3121
ச.தாரங்கன், தரம் - 9, பண்ணாகம் மெ.ம.வித்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3122
ஏ.எச்.எம்.அஃப்ஹாம், தரம் - 5B, மடிகே மிதியால ம.கல்., பண்டார கொஸ்வத்த.


அங்.இல: 3123
டுள்சின் டிலக்ஸ், தரம் - 11, உடையார்கட்டு ம.வித்., முல்லைத்தீவு.


அங்.இல: 3124
இ.பவீசன், தரம் - 11, சென்.ஜோன்ஸ் கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3125
அ.பாஸ்கரன், தரம் - 8B, பண்ணாகம் மெ.ம.வித்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3126
பி.பிரசன்னகுமார், தரம் - 3, சிவானந்த த.வித்., கண்டி.

## விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3127
எம்.ரஸ்மி, தரம் - 5, அல்-இர்ஷாட் ம.வித்., ஹாலி-எல.


அங்.இல: 3128
மு.ஆரணி, தரம் - 11A, ஞானசாரியார் கல்., யாழ்ப்பாணம்.


அங்.இல: 3129
ந.நிரோஜினி, தரம் - 10B, மத்திய கல்., கிளிநொச்சி.


அங்.இல: 3130
எம்.சஹாட் காதர், தரம் - 11, கலைமகள் வித்., மாத்தளை.


அங்.இல: 3131
எஸ்.ஜீவிதா, தரம் - 9A, சைவப்பிரகாச ம.கல்., வவுனியா.


அங்.இல: 3132
ஹஸன் பாரி, தரம் - 5B, ஜென்னத் பாட., கிந்தொட.


அங்.இல: 3133
எம்.சுலைம், உயர் தரம், ஜிஃப்ரியா அரபுக் கல்., காலி.


அங்.இல: 3134
வ.சுரேந்திரன், உயர் தரம்(கலை), யா/நயினாதீவு ம.வித்., நயினாதீவு.


அங்.இல: 3135
ஆசிகா ஹனிபா, தரம் - 3, வெலம்பொடை ம.வித்., வெலம்பொடை.


அங்.இல: 3136
எஃப்.ஹப்ஸா, தரம் - 8I, பு/அ/ம/ம/வி., நாவலப்பிட்டிய.


அங்.இல: 3137
பீ.அஸாருதீன், தரம் - 10C, சாஹிரா தே.பாட., புத்தளம்.


அங்.இல: 3138
எச்.இர்ஷாட், தரம் - 11, கஹவத்த ந.த.ம.வித்., கஹவத்த.

## வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' பரிசுகள்




இது, வாராந்தம் 11 ஆயிரம் ரூபா பெறுமதியான 'வீரோதார' உற்பத்தி கல்வி உபகரணங்களை பரிசுகளாக அள்ளித்தரும் 'வீரோதார-விஜய்' குறுக்கெழுத்துப்போட்டி. இவ்வார 'விஜய்'யை வாசிக்கும்போதே இந்த போட்டிக்கான அநேக விடைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். தெரிவு செய்யப்படும் வெற்றியாளர்களுக்கான பரிசுகளின் விபரம் வருமாறு;

★ **முதலாம் பரிசு**
ரூபா 3,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **இரண்டாம் பரிசு**
ரூபா 2,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **மூன்றாம் பரிசு**
ரூபா 1,000 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்

★ **10 ஆறுதல் பரிசுகள்**
ஒவ்வொருவருக்கும் ரூபா 500 பெறுமதியான வீரோதார உற்பத்திகள்.

விடைகளை நிரப்பி-கத்தரித்து-தபாலட்டையில் மாத்திரம் ஒட்டி 11.11.2009 இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி;

**வீரோதார-விஜய்
குறுக்கெழுத்துப் போட்டி இல: 17
'விஜய்',
த.பெ.இல: 2037, கொழும்பு.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 வீ | வ | சா | யி | ■ | ■ |
| டு | ■ | ■ | ■ | 2 ணி | 3 பி |
| 4 க | ர் | 5 வ | ம் | ■ | ர |
| தை | ■ | தை | ■ | 6 உ | மி |
| ■ | 7 பு | ■ | 8 மீ | ■ | ட் |
| 9 ஓ | வீ | ய | ன் | ■ | ■ |

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 15 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்

**முதலாம் பரிசு**
எ.டன்சியஸ்,
395/43, யோஜேலாஸ் வீதி,
இறம்பைக்குளம்,
வவுனியா.

**இரண்டாம் பரிசு**
ஏ.ஆர்.எப்.ரிப்னா,
24/4, இமாம்
கொமெய்னி ரோட்,
காத்தான்குடி-02.

**மூன்றாம் பரிசு**
பா.ஷாலினி,
பிருந்தாவனம்,
நாகம்மாள் கோவில் வீதி,
உடுவில். சுன்னாகம்.

### ஆறுதல் பரிசுகள்

எச்.எல்.எம்.ரில்வான்,
பீல்லகொட,
குருத்தலாவ.

கணேஷ் சுதர்ஷன்,
வெவண்டன் எஸ்டேட்,
ரம்பொட.

மொஹமட் பாயிஸ்,
18, பாக்கீர் மாக்கார் அவென்யூ,
மரதான, பேருவளை.

பி.பாஸ்கரன்,
பள்ளேகொட தோட்டம்,
தர்கா நகர்.

எம்.எல்.எம்.நிப்ஷான்,
எலபடகம,
பன்னல.

மோ.கலக்ஸி பிரியங்கா,
475, பிரதான வீதி,
மாத்தளை.

ஏ.எச்.அஷானா அப்ரின்,
39, மெயின் வீதி,
நற்பிட்டிமுனை.

கே.துவாரகன்,
புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்.

சாலிஹ் எம்.றியாம்,
108, அஷ்ரப் வீதி,
ஏறாவூர்-02.

தி.தர்ஷனன்,
64, மகிந்த மாவத்தை,
நுவரெலியா.




| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | |
| | ■ | லி | ■ | ■ | ■ |
| த | ■ | ■ | 3 | | 4 |
| | ■ | 5 | | ■ | |
| ■ | ■ | | ■ | ■ | |
| 6 | த | | ■ | 7 ஏ | |

பெயர் : ..............................
வீட்டு முகவரி : ..............................
..............................
தொலைபேசி இல : ..............................
பாடசாலை : ..............................
அருகிலுள்ள நகரம் : ..............................
மாவட்டம் : ..............................

### மேலிருந்து கீழ்

1. கருவி என்றும் சொல்லலாம்.
2. பீதி அடைதலை இப்படிக் கூறுவர்.
3. ஆசிரியரைக் குறிக்கும்.
4. பொருட்களை விற்பனை செய்பவர்.
5. பலன்தரும் மரங்களில் ஒன்று.

### இடமிருந்து வலம்

1. இலங்கையை இவர்களும் ஆட்சி செய்துள்ளனர்.
3. சின்னஞ்சிறு பறவை.
5. வீதி என்றும் சொல்லலாம்.
6. அரிய செயல்களை இப்படிக் கூறுவர்.
7. நீர்நிலை ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்முனை, 2 ஆம் வட்டாரம்-உடையார் வீதியைச் சேர்ந்த கிருபராசா-நல்லம்மா தம்பதியரின் அன்பு மகன் நேறுஜன், 30.10.2009 அன்று தனது பத்தாவது பிறந்தநாளை வெகுவிமர்சையாகக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் உட்பட உறவினர்கள் அனைவரும் முருகப் பெருமான் அருள் பெற்று, நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.






எம்.எம்.முகர்ரம்-பாத்திமா நிரோஷா தம்பதியரின் செல்வப் புதல்வன் எம்.எம்.இல்தாஃப், 31.10.2009 அன்று தனது இரண்டாவது பிறந்தநாளை டுபாயில் கொண்டாடினார். இவரைக் கடுகஹவத்தையில் வசிக்கும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் பல்கலையும் கற்று, நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல் - எஃப்.ஹஃப்ஸா)

பதுளை, மஹியங்கனை வீதியைச் சேர்ந்த ஜெயகாந்த்-மங்களேஸ்வரி தம்பதியரின் செல்வப் புதல்வி ஜெ.நிர்த்தனா, 31.10.2009 அன்று தனது முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா உட்பட உறவினர்கள் அனைவரும் பேச்சியம்மன் அருளால் நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல் : ராஜினி ஜெகநாத்)






கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



ரிஸ்னா நியாஸ்,
தரம் - 9B,
மடுல்போவ மு.ம.வித்.,
ஹெம்மாதகம.



ஜே.அனுஜா,
தரம் - 4, இந்துக் கல்.,
இறம்பொடை.



பாத்திமா அர்ஹமா,
EBM பாலர் பாட.,
பம்மன்ன.



அரீஜ் அஹமட்,
தரம் - 6C,
அல்-மனார் ம.கல்.,
கல்முனை.

## மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

முடிவுத்திகதி 18.11.2009

**ஜனவரி மாதத்துக்கான தலைப்புகள்**

- ★ தரம் 1-5 - எனது வீடு அல்லது ஐஸ் பழம்
- ★ தரம் 6-8 - எனது ஆசிரியர் அல்லது மாட்டு வண்டி
- ★ தரம் 9-11 - மரங்கள் நடுவோம் அல்லது மீன் வியாபாரி

**அன்பார்ந்த தம்பி, தங்கைகளே!**


நாம் கொடுக்கும் தலைப்புகளில் உங்கள் கைவண்ணங்களை விரைவில் அனுப்பி வையுங்கள். தெரிவு செய்யப்படும் கைவண்ணங்கள் இப்பகுதியில் பிரசுரமாகும். எனவே, முயற்சியைக் கைவிடாதீர்கள். அத்துடன் உங்கள் பெயர், தரம், பாடசாலை, கைவண்ணத்தின் தலைப்பு என்பனவற்றை மறக்காமல் எழுதி அனுப்புங்கள்.

# மாதம் ஒரு தலைப்பிலான உங்கள் கைவண்ணங்கள்

### கூசா



க.டிலக்ஷன், தரம் - 8A,
ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்.,
அக்கரைப்பற்று.




இரா.அக்ஷயா,
தரம் - 6, வடிவாம்பிகா த.வித்.,
சிலாபம்.




எஃப்.ஜன்னா,
தரம் - 7, மீலாத் மு.வித்.,
தெஹிவளை.

### மாம்பழம்



ந.அகிலாஷினி,
தரம் - 1,
நு/ஹோம்வுட் த.வித்.,
அக்கரப்பத்தனை.



உஸய்ட் அனூர்டீன்,
தரம் - 2,
அல்-இம்ரான் சர்வதேச பாட.,
கண்டி.



சு.கிருஷாந்தினி,
தரம் - 4B,
தி/கலைமகள் வித்.,
திருகோணமலை.

### நெடுஞ்சாலையில் வாகனங்கள்




கே.ஆர்.ரிஸ்லா,
தரம் - 9A,
கமு/அல்-ஹம்றா வித்.,
மருதமுனை.

### பட்டம்



யே.குகின்சிஹா, தரம் - 3,
இறம்பைக்குளம் ம.ம.வித்.,
வவுனியா.



ஏ.எம்.ஹசீன், தரம் - 5,
ஸாஹிரா ஆண்கள் கல்.,
கடுகஸ்தோட்ட.

### சிரமதானம்



க.யதுஷன், தரம் - 9C,
யாழ்.மத்திய கல்., யாழ்ப்பாணம்.

### ஆசிரியர்



கு.சரத்பாபு, தரம் - 7B,
புனித மரியாள் த.ம.வித்.,
எட்டியாந்தோட்டை.



எம்.டி.எஃப்.மஹீஷா, தரம் - 8B,
அல்-மின்ஹாஜ் தே.பாட.,
ஹபுகஸ்தலாவை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகிலேயே பிரமாண்டமானவை




உலகிலேயே மிகப் பிரமாண்டமான உள்ளக நீச்சல் தடாகம் கெனடாவில் உள்ளது. 5 ஏக்கர் பரப்பளவைக் கொண்ட பகுதியில் இந்த நீச்சல் தடாகம் அமைக்கப்பட்டுள்ளது.

****




பிரமாண்டமான பயணிகள் கப்பல் இதில் 4,300 பயணிகள் பயணம் செய்ய முடியும்.

****



மிகப்பெரிய பயணிகள் பஸ் 'ஜம்போ குரூஸர்' என்று அழைக்கப்படுகின்றது. 'டு இன் வன் பஸ்' என்றும் குறிப்பிடப் படுகின்றது. 170 பயணிகள் பயணிக்கக்கூடியது.

****



மிகப் பெரிய பாரம் தூக்கி. ஜேர்மனி நிறுவனமொன்றினால் தயாரிக்கப்பட்டது. 45,000 தொன் எடை கொண்டது. 95 மீற்றர் உயரத்தையும் 215 மீற்றர் அகலத்தையும் கொண்டது.

****



பிரமாண்டமான விமானம் எயார் பஸ் A380. 555 பயணிகள் பயணம் செய்யக்கூடிய விமானம் இது.

****



பிரமாண்டமான உள்ளக அரங்கம். 'மார்க்கானா ஸ்டேடியம்' என்று அழைக்கப் படுகின்றது. பிரேஸிலில் அமைக்கப்பட்டுள்ள இந்த அரங்கானது ஒரே நேரத்தில் 199,000 ரசிகர்களைக் கொள்ளக்கூடியது.

****



உலகிலேயே மிக உயரமான கட்டடம் டுபாய் நாட்டில் அமைந்துள்ளது. இந்தக் கட்டடம் 900 மீற்றர் உயரத்தைக் கொண்டது. 2008 இல் இது கட்டி முடிக்கப்பட்டது.




## அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# அமெரிக்காவில் 'இன்ஃபுளுவென்ஸா'வினால் அவசரகால நிலை அறிவிப்பு





இன்ஃபுளுவென்ஸா ஏ (HINI) எனப்படுகின்ற தொற்று வியாதி ஐக்கிய அமெரிக்கா பூராவிலும் விரைவாகப் பரவி வருகின்றது. இதற்கு ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மரணமடைந்துள்ளமையினால் இந்நோயைக் கட்டுப்படுத்துவதற்கு அமெரிக்காவில் அவசரகால நிலையை ஜனாதிபதி பராக் ஒபாமா அறிவித்துள்ளார்.

இதன்படி இன்ஃபுளுவென்ஸா தொற்றிற்கு உள்ளானவர்கள் மீது விசேட கவனத்தை செலுத்துவதற்கும் உடனடியாக தேவையான மருத்துவ சேவைகளை வழங்குவதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சுகாதாரத்துறை அதிகாரிகளை ஜனாதிபதி ஒபாமா பணித்துள்ளார். மேற்படி, தொற்றானது கடந்த ஏப்ரல் மாதம் மெக்ஸிக்கோ நாட்டிலேயே முதலாவதாக ஆரம்பமாகியது. பின்னர் படிப்படியாக அமெரிக்கா உட்பட உலக நாடுகள் பலவற்றிற்கும் அது பரவியுள்ளது என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

''இன்ஃபுளுவென்ஸா தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மருந்துவகைகள் உடனடியாக தயார்படுத்தப் படுவதாகவும் தற்போதைக்கு 11 மில்லியன் மருந்து வகைகள் அமெரிக்க சுகாதார அதிகாரிகளுக்கு அனுப் பப்பட்டுள்ளதாகவும்'' அமெரிக்காவில் தொற்று வியாதிகளை ஒழித்தல் மற்றும் நிர்வாகப் பிரிவின் தலைவருமான யோமஸ் பிரிடன் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# "மூன்று நிமிடங்கள் குளித்தால் போதும்..."

## வெனிசுவெலா ஜனாதிபதி

''மூன்று நிமிடங்களுக்கு மாத்திரமே குளியுங்கள்'' என்று வெனிசுவெலா நாட்டின் ஜனாதிபதி ஹியுகோ சாவேஸ் தமது நாட்டு மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

வறட்சி காரணமாக நீர்நிலைகளில் நீர்மட்டம் குறைந்து வருகின்றமையால் மின்சார உற்பத்தியை அது பாதித்துள்ளதாகவும் எனவே, நீரை சேமிப்பதற்காகவே இந்த யோசனையை அவர் முன்வைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து, மக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ள ஜனாதிபதி சார்வேஸ் மேலும் கூறுகையில் ''சிலர் குளிக்கச் சென்றால் அரை மணித்தியாலத்திற்கும் மேல் குளிப்பார்கள். இது நீரை விரயப்படுத்தும் ஒரு செயல் என்றே கூறுவேன். உண்மையில் மூன்றே நிமிடங்களில் ஒருவர் நன்றாக குளித்து விடமுடியும்'' என்று கூறியுள்ளார்.

விமானத்தைப் பயன்படுத்தி செயற்கை மழையை ஏற்படுத்துவதற்கும் மின்சார விரயத்தைக் குறைக்கும் மின் உபகரணங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் ஜனாதிபதி சாவேஸ் குறிப்பிட்டுள்ளார்.

**அற்லஸ் கேள்வி - 228**

**கேள்வி:** HINI தொற்று எந்த நாட்டில் முதலாவதாக ஆரம்பமாகியது?

சரியான விடை.....................................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 228,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

**போட்டி இல - 226 இன் சரியான விடை: ஒக்டோபர்**

**பரிசு பெறுவோர்**

சுவர்ணா பத்மநாதன்,
காளி கோவிலடி,
சங்கானை, யாழ்ப்பாணம்.

அ.பிரகாஷ்,
176/9, ஜெம்பட்டா வீதி, கொழும்பு-13.

பாத்திமா நுஷானி,
26, லேடி டொரிங்டன் வீதி, கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களம் பயில்வோம்



215

## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் நாம் மாமிக்கும் மகனுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

கலாபூஷணம் கே.என்.டி.பீரிஸ்

පුතා: ආයුබෝවන් නැන්දේ.
ஆயுபோவன் நெந்தே.
மகன்: வணக்கம் மாமி.



නැන්දා: ආයුබෝවන් පුතා. එන්න ඇතුළට.
ஆயுபோவன் புதா. என்ன எதுளட.
மாமி: வணக்கம் மகன். உள்ளே வாருங்கள்.

වාඩිවෙන්න.
வாடிவென்ன.
உட்காருங்கள்.

පුතා: නැන්දට එළවළු ටිකක් ගෙනාවා.
நெந்தட எலவளு டிகக் கெனாவா.
மகன்: மாமிக்கு மரக்கறி கொஞ்சம் கொண்டுவந்தேன்.

නැන්දා: එළවළු කොහෙන්ද පුතා?
எலவளு கொஹெந்த புதா?
மாமி: மரக்கறி எங்கிருந்து மகன்?

පුතා: අපේ ගෙවත්තේ වවපු එළවළු.
அபே கெவத்தே வவபு எலவளு.
மகன்: எங்கள் தோட்டத்தில் நாட்டிய மரக்கறி.

නැන්දා: ආ ඇත්තද පුතා? කවුද එළවළු හිටවන්නේ?
ஆ எத்தத புதா? கவுத எலவளு ஹிடவன்னே?
மாமி: ஆ உண்மையா மகன்? மரக்கறி நாட்டுவது யார்?



පුතා: මමයි අක්කයි.
மமய் அக்கய்.
மகன்: நானும் அக்காவும்.

නැන්දා: පුතාලා මොනවද හිටවලා තියෙන්නේ?
புதாலா மொனவத ஹிடவலா தியென்னே?
மாமி: நீங்கள் என்ன நாட்டி இருக்கிறீர்கள்?

පුතා: මිරිස්, වම්බටු, බණ්ඩක්කා, කරවිල.
மிரிஸ், வம்படு, பண்டக்கா, கறவில.
மகன்: மிளகாய், கத்தரிக்காய், வெண்டிக்காய், பாகற்காய்.

නැන්දා: හොඳ වැඩක් පුතා. මේවා අලුත් එළවළුනේ?
ஹொந்த வெடக் புதா. மேவா அலுத் எலவளுனே?
மாமி: நல்லதொரு வேலை மகன். இவை புது மரக்கறிகள்தானே?

පුතා: එහෙනම් මම ගිහිල්ලා එන්නම් නැන්දේ.
எஹெனம் மம கிஹில்லா என்னம் நெந்தே.
மகன்: அப்போ நான் போய் வருகிறேன் மாமி.

නැන්දා: හොඳයි පුතා ඔයාට ගොඩක් ස්තූතියි.
ஹொந்தய் புதா. ஒயாட கொடக் ஸ்தூதிய்.
மாமி: நல்லது மகன். உங்களுக்கு மிக்க நன்றி.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க.**

உதா: மாமிக்கு மரக்கறி கொண்டுவந்தேன்.
නැන්දට එළවළු ගෙනාවා.

i. தோட்டத்தில் நாட்டிய மரக்கறி.
...............................................................................

ii. இவை புது மரக்கறிகள்தானே?
...............................................................................

iii. நல்லது மகன்.
...............................................................................






* 'Do' எனும் 'நிகழ்கால துணைவினைச் சொல்' (Present Tense Auxiliary Verb) வேறு வகையான சில வாக்கியங்களில், 'மூல வினைச்சொல்' (Stem Verb) சகிதம் கையாளப்படுகின்றபோது. அவ்வாக்கியங்களில் 'Do' என்பது ஓர் 'உதவிபுரியும் வினைச்சொல்'லாக (Helping Verb) செயல்படுகின்றது.

* உதாரணமாக, 'நிகழ்கால தனி வாக்கியங்களில்' (Present Simple Tense) காணப்படுகின்ற 'உடன்பாடு நிலை' (Affirmative) வாக்கியங்களை, 'வினா' நிலை (Interrogative) வாக்கியங்களாக மாற்றியமைப்பதற்கு, 'Do' எனும் 'துணைவினைச் சொல்' உதவி புரிகின்றது. இத்தகைய சந்தர்ப்பங்களில்தான், 'Do' என்பது 'உதவிபுரியும் வினைச்சொல்' எனப் பெயர் பெறுகின்றது.

* உதாரணங்களை இங்கே அவதானிப்போம்.

(அ) You go. (Affirmative)
நீ போகின்றாய். (உடன்பாடு வாக்கியம்)

* மேற்படி 'உடன்பாடு நிலை' வாக்கியத்தை, 'வினா நிலை' வாக்கியமாக பின்வருமாறு மாற்றியமைக்கலாம்.

(ஆ) Do you go? (Interrogative)
நீ போகின்றாயா? (வினா வாக்கியம்)
( நீ போவதுண்டா?)

**குறிப்பு:-** இந்த 'வினா' வாக்கியத்தில், 'Do' என்பதற்கு தனியான அர்த்தம் பெறப்படுவதில்லை. இங்கே 'Do' என்பது 'உதவி புரியும் வினைச்சொல்'லாக (Helping Verb) மாத்திரமே செயல்படுகின்றது.

---

* மேலும் உதாரணங்களை இங்கே பயில்வோம்.

(இ) They go. (Affirmative)
அவர்கள் போகின்றார்கள். (உடன்பாடு வாக்கியம்)

(ஈ) Do they go? (Interrogative)
அவர்கள் போகின்றார்களா? (வினா வாக்கியம்)
(அவர்கள் போவதுண்டா?)

* மேற்படி, வாக்கியங்கள் 'செயற்படுபொருள்' (Object) சகிதம் பின்வருமாறு அமைகின்றன.

(அ) You go to school daily. (Affirmative)
நீ தினமும் பாடசாலைக்குப் போகின்றாய். (உடன்பாடு)

(ஆ) Do you go to school daily? (Interrogative)
நீ தினமும் பாடசாலைக்குப் போகின்றாயா? (வினா)
(நீ தினமும் பாடசாலைக்குப் போவதுண்டா?)

**குறிப்பு:-** இவ்வாக்கியம் வழமையாக நடைபெறுகின்ற கருமங்களை தெரிவிக்கின்றமையால், 'போகின்றாயா' என்பதை 'போவதுண்டா' என தமிழில் அர்த்தம் கொள்ளலாம். இச்சொல் சிறப்பாகவும் அமையும்.

(இ) They go to the library daily. (Affirmative)
அவர்கள் தினமும் நூலகத்துக்குப் போகின்றார்கள். (உடன்பாடு)

(ஈ) Do they go to the library daily? (Interrogative)
அவர்கள் தினமும் நூலகத்துக்குப் போகின்றார்களா? (வினா)
(அவர்கள் தினமும் நூலகத்துக்குப் போவதுண்டா?)

**விளக்கம்:-** Affirmative - உடன்பாடு வாக்கியம்.
Interrogative - வினா வாக்கியம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பைக் மீனின் கட்டளைப்படி

ரஷ்ய நாட்டுக்கதை 03

நகர மக்கள் கத்தியதை தொடர்ந்து எமில்யா இன்னும் வேகமாகப் போகுமாறு 'ஸ்லெட்ஜ்' வண்டியைத் துரிதப்படுத்தினான். ஸ்லெட்ஜ் வண்டி காட்டை அடைந்தவுடன் அங்கு நிறுத்திவிட்டுக் கூறினான்,

''பைக் மீனின் கட்டளைப்படி, என் விருப்பப்படி நடக்கட்டும்! கோடரியே, விறகு வெட்டு. கட்டைகளே, ஒவ்வொன்றாக ஸ்லெட்ஜ் வண்டிக்குள் ஏறி, நீங்களாகவே கட்டிக் கொள்ளுங்கள்''

உடனே காய்ந்த மரங்களைக் கோடரி வெட்டிப் பிளக்கத் தொடங்கியது. விறகுத் துண்டுகள் ஒவ்வொன்றாக ஸ்லெட்ஜ் வண்டிக்குள்ளாக ஏறி, அவையாகவே ஒன்றுசேரக் கட்டிக் கொண்டன. பின்னர் கனமான குறுந்தடி ஒன்றை வெட்டுமாறு கோடரிக்கு எமில்யா உத்தரவிட்டான். இதன் பின்னர் விறகுக் கட்டுகளுக்கு மேலாக ஏறிக் கொண்டு கத்தினான்;

''பைக் மீனின் கட்டளைப்படி, என் விருப்பப்படி நடக்கட்டும்! ஸ்லெட்ஜ் வண்டியே, வீட்டுக்குப் போ''

## பலரை இடித்துத் தள்ளிவிட்டு வந்த அதே நகரத்தின் வழியாக எமில்யா திரும்பவும் கடந்து சென்றபோது.....

மிகுந்த வேகத்தில் ஸ்லெட்ஜ் வண்டி வீடு நோக்கிச் சென்றது. பலரை இடித்துத் தள்ளிவிட்டு வந்த அதே நகரத்தின் வழியாக எமில்யா திரும்பவும் கடந்து சென்றான். அங்கே ஏற்கனவே மக்கள் இவனுக்காகக் காத்துக் கொண்டிருந்தனர். அவர்கள் எமில்யாவைப் பிடித்து, ஸ்லெட்ஜ் வண்டியை விட்டுக் கீழே இறக்கி அடிக்கவும் திட்டவும் தொடங்கினர்.



தான் மிகவும் கஷ்டமான நிலையில் இருப்பதைக் கண்ட எமில்யா, மெல்லிய குரலில் கூறினான்;

''பைக் மீனின் கட்டளைப்படி, என் விருப்பப்படி நடக்கட்டும்! குறுந்தடியே, வந்து இவர்களைச் சரியாகச் சாத்து''

வண்டியில் முன்னர் வெட்டி வைத்த குறுந்தடி பாய்ந்து வந்து அவர்களை நையப்புடைத்தது. நகர மக்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்தார்கள். வீடு திரும்பிய எமில்யா சூட்டடுப்பின் மீது ஏறி திரும்பவும் படுத்துக்கொண்டான்.

சிறிது காலம் சென்றதும் எமில்யாவினுடைய நடவடிக்கைகளைப் பற்றிக் கேள்விப்பட்ட அரசர், அவனைக் கண்டுபிடித்து அரண்மனைக்குக் கூட்டிவருமாறு தனது அதிகாரிகளில் ஒருவனை அனுப்பினார்.

எமில்யாவினுடைய கிராமத்திற்கு வந்து அவனது வீட்டுக்குள் நுழைந்து அந்த அதிகாரி கேட்டான்:

''முட்டாள் எமில்யா நீ தானா?''

சூட்டடுப்புப் பரண் மீது இருந்தவாறே எமில்யா பதிலளித்தான்.

''நான்தான், அதற்கென்ன?''

''சீக்கிரம் உடைகளை அணிந்துகொண்டு வா,

## எமில்யாவை அறைந்த அதிகாரிக்கு நடந்த கதி

அரசருடைய அரண்மனைக்கு உன்னைக் கூட்டிப்போகப் போகிறேன்''

''எனக்கு இங்கேயே நன்றாகத்தான் இருக்கிறது'' என்றான் எமில்யா.

அதிகாரி கோபமடைந்து எமில்யாவின் முகத்தில் அறைந்தான். உடனே எமில்யா மெல்லிய குரலில் கூறினான்;

''பைக் மீனின் கட்டளைப்படி, என் விருப்பப்படி நடக்கட்டும்! குறுந்தடியே வந்து இவனை சரியாகச் சாத்து''

குறுந்தடி தாவி வந்து அந்த அதிகாரியைப் பலமாக அடிக்கவே, அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நன்றாக அடிவாங்கி நொண்டிக் கொண்டே திரும்பி அரண்மனைக்கே சென்றான்.

தன்னுடைய அதிகாரியால் எமில்யாவைச் சமாளிக்க முடியவில்லை என்பதை அறிந்த அரசர் மிகவும் வியப்புற்றார். எனவே, தனது பிரபுக்களில் சிறந்த ஒருவனை பார்த்து,

''நீ சென்று எமில்யாவைப் பிடித்து என் அரண்மனைக்குக் கூட்டி வரவேண்டும் அல்லது உன் தலையை வாங்கிவிடுவேன்'' என்றார் அரசர்.

(தொடரும்...)

# புத்திசாலி சிறுவன்

முன்னொரு காலத்தில் சன்ச்சியுன் என்ற அரசன் சீனாவை ஆண்டு வந்தான். அவனுக்கு குழந்தைகள் கிடையாது. குழந்தைகள் உள்ள பெற்றோர்களைக் கண்டால் அவனுக்குப் பிடிக்கவே பிடிக்காது. அந்தப் பொறாமைக் குணத்தின் விளைவாக குழந்தைகள் உள்ளவர்களுக்கு தன்னால் முடிந்த அளவு தொந்தரவுகளைக் கொடுத்து வந்தான். அத்துடன், எல்லோர் முன்னிலையிலும் அவர்களை அவமானப்படுத்தி மகிழ்ச்சி அடைவான். இந்த அரசனின் மூத்த மந்திரியின் பெயர் சூயு சுக்யு. அவர் அனுபவம் மிகுந்த புத்திசாலி மந்திரி. இவருக்கு பத்து வயதில் ஒரு மகன். தன் தந்தையைப் போன்று அதிபுத்திசாலிப் பையன். அரசன் எப்படியாவது இந்த மந்திரியையும் அவனின் மகனையும் அவமானப்படுத்தி மகிழ வேண்டும் என்று மனதிற்குள் திட்டம் போட்டுக் கொண்டான்.

தன் மந்திரியிடம், ''நாளை நடக்க இருக்கும் திருவிழா விருந்திற்கு உமது மகனையும் நீர் கட்டாயம் அழைத்து வரவேண்டும்'' என்று கூறினான். ஏதோ ஒரு காரணத்திற்காக தன்னை அவமானப்படுத்தும் நோக்கத்துடன் தான் அரசன் இந்த அழைப்பை விடுத்திருக்கிறான் என்று மந்திரிக்குத் தெரிந்தாலும் அரச கட்டளையாயிற்றே... அதனை மீறி விட முடியுமா என்ன?

அன்றிரவு தன் மகனிடம், ''மகனே, இதைப் போன்றதொரு அரச மரியாதை கிடைப்பதென்பதை யாராலும் கனவில் கூட எண்ணிப் பார்க்க முடியாது. ஆகையால் நீ மிகவும் கவனமாக நடந்து கொள்ளவேண்டும்'' என்றார் மிகவும் கவலையுடன்.

''நீங்கள் கவலைப்பட வேண்டாம் அப்பா...உங்கள் புத்திமதிகளை ஏற்று நான் கவனமாக நடந்து கொள்வேன்'' என்றான் சிறுவன். ஆயினும்... என் மகனுக்கு மட்டும் இந்த விசேட மரியாதை என்ற போர்வைக்குள் ஒளிந்திருக்கும் விபரீதம் என்னவாக இருக்கும் என்று உள்ளூறக் கலங்கிக் கொண்டே இருந்தார் மந்திரி. விருந்தின் போது அரசன் சிறுவனைத் தன் பக்கத்தில் அமர்த்திக் கொண்டான். அப்போது அரசர் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் பணிவின் மொத்த உருவாக சமயோசிதமாகவே பதில் அளித்தான்.



விருந்து முடிந்ததும், ''யாரங்கே? கொண்டு வாருங்கள்'' என்று அரசன் உத்தரவிடக் கூடி இருந்தவர்கள் அனைவரும் எதைக் கொண்டு வரச் சொல்கிறார் அரசர் என்று படபடப்பாகப் பார்த்தார்கள். அது கொண்டு வரப்பட்டது. அது ஒரு கழுதை அதன் கழுத்தில் 'இது சூயு சுக்யூ கழுதை' என்று எழுதப்பட்டு ஒரு பெரிய அட்டை தொங்கவிடப்பட்டியிருந்தது. 'ஓ! இந்த மந்திரிக்கு இதுவும் வேண்டும் இன்னமும் வேண்டும் என்று கூறி மகிழ்ந்து போன பொறாமை பிடித்த கூட்டம் பலமாக கைதட்டிச் சிரித்தது.

உடனே அந்த நயவஞ்சக அரசன் சிறுவனைப் பார்த்து, ''பார் உன் அப்பாவை அனைவரும் என்னமாக பரிகசித்து மகிழ்கின்றனர். இதற்கு நீ என்ன பதில் சொல்லப்போகிறாய்?'' என்று கேட்டதும் சிறுவன் சிறிதும் பதற்றப்படாமல், ''அரசே எனக்கு ஒரு சிறிய சோக் துண்டு வேண்டும்'' என்றான்.

அவமானத்தில் துடித்துக் கொண்டிருந்த அவன் தந்தை இந்த இக்கட்டை என் குழந்தை எப்படி சமாளிக்கப் போகிறான் என்று தவித்துக் கொண்டிருந்தார். சிறுவன் கேட்ட சோக் வந்தது. சிறுவன் அந்தக் கழுதையின் அருகே வந்தான். 'இது தான் சூயு சுக்யூ கழுதை' என்று எழுதித் தொடங்கவிடப்பட்டிருந்த அட்டையில் ஒரே ஒரு கோட்டை இழுத்து 'சூயு சுக்யூவின் கழுதை' என்று மாற்றிவிட கூட்டம் சட்டென அடங்கிவிட்டது. தந்தையின் கண்களில் ஆனந்தக் கண்ணீர், உடனே அரசன் வியப்புடன் சிறுவனைக் கட்டி அணைத்து ஏராளமான பரிசுகளை வழங்கி எதிர்காலத்தில் நீ தான் இந்த நாட்டின் முதல் மந்திரி என்று மனதார வாழ்த்தினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் தலைமைப் பதவியில் யூனுஸ்கான்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் தலைமைப் பதவியிலிருந்து பதவி விலகுவதாக கடிதம் கொடுத்திருந்த யூனுஸ்கானின் பதவி விலகல் கடிதத்தை அந்நாட்டின் கிரிக்கெட் சபை ஏற்றுக்கொள்ள மறுத்ததையடுத்து மீண்டும் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்கு அவர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

"தற்போது நான் மகிழ்ச்சி அடைகிறேன். பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் அதன் தலைவரும் என்மீது வைத்துள்ள நம்பிக்கையை எண்ணி சந்தோஷப்படுகின்றேன்" என்று யூனுஸ்கான் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த செம்பியன்ஸ் கிண்ணப் போட்டியின்போது பாகிஸ்தான் அணி பணத்திற்கு விலை போனதாலேயே தோல்வியை சந்தித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டிருந்த நிலையிலேயே யூனுஸ்கான் தலைமைப் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்து பதவி விலகல் கடிதத்தையும் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தான் நியூஸிலாந்து போட்டிகள்



ஐ.சி.சி செம்பியன்ஸ் கிண்ணப் போட்டிகளின் பின்னர், பாகிஸ்தான், நியூஸிலாந்து அணிகளுக்கிடையே நடைபெற ஏற்பாடாகியிருந்த சர்வதேச ஒருநாள் போட்டிகள் மற்றும் 20/20 போட்டிகளை போதிய பாதுகாப்பின்மை காரணமாக அபுதாபி மற்றும் டுபாய் நகரங்களில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டுபாய், அபிதாபி நகரங்களில் வசிப்பவர்கள் கிரிக்கெட் போட்டிகளில் மிகுந்த ஆர்வம் உடையவர்கள். ஆகையால், அங்கு வெற்றிகரமாக போட்டிகளை நடத்த முடியும் என்று தாம் எதிர்பார்ப்பதாகவும் பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

## மின்சாரத்தை சேமிப்போம்

## போட்டி இல - 12

### தலா ரூ.1,000 பணப்பரிசை வெல்லும் வாசகர்கள் வருமாறு;

எஃப்.இன்ஷாமமுல் ஃபரீட், 46/4, உடத்தலவின்ன.
எஃப்.ஸிஃபானி,
34, அன்கும்புர வீதி, அலவத்துகொட, கண்டி
வி.ஏ.சம்ஸுதீன்,
12, கணேஷ் ஒழுங்கை, திருகோணமலை.
வி.திஷானி, கோட்டைக்கல்லாறு-02, மட்டக்களப்பு.
டி.திஷான், மாணிக்கபதி,
பிரதான வீதி, சங்கானை, யாழ்ப்பாணம்.
எஸ்.பாத்திமா ஜெனட்,
11/6, 01 ஆம் குறுக்கு தெரு, கருமான்கட, வவுனியா.
எஸ்.எட்வர்ட்,
306, ஆஸ்பத்திரி வீதி, சின்னக்கடை, மன்னார்.
பத்மநாதன் கஜமாலன்,
24/6, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.
சுஜானி, இத்தகெடியவில, வீரபான.
நிலுகா, தெகஸ்வத்த, தம்பஹல.
அஷேன், போபிட்டிய, வலல்லாவிட.
ஜெஸ்மின், தேக்கவத்த, கடுகஸ்தொட்ட.
அனுராதா, 15A, சாத்து இல்லம் வீதி, ஹட்டன்.
ஜயனி, 63, ஒறுதொட வீதி, கம்பஹா.
செவ்வந்தி, கிழக்கு உடுகம, உடுகம.
இஷங்க, 595/1, மொரகெடிய, பன்னிப்பிட்டிய.
வெனுர, 639/ஏ/1, ஈரியவெடிய, களனி.
மினிந்து, 239, உனகம, ஹொரண.
லக்ஷான், மஹவத்த, பண்டாரவளை.
சத்துர, கொடிகாரகொட, மொரவக.
ஷஷிகா, 107/7, பிடவல கம, பதுளை.
சாமிக, 81, வில்லியம் கொபல்லாவ மாவத்தை, கண்டி.
துஷல், 20, மடவல உல்பத, மாத்தளை.
கலன ஹேரத், வெரவல, பம்பரதெனிய.
சச்சினி, ரத்மலே வத்த, வாரியாபொல.
சத்துரிகா, பஹல போபிடிய, பெல்மடுல்ல.
ஹர்ஷனீ, 127, லங்கமுவ, கடுகன்னாவ.
செனெவிரத்ன, வானேமங்கட, வகுருவெல, புத்தளம்.
சமில், 16, சமகி மாவத்தை, மாதம்பே.
நிஷாதி, மொரஹெல, பலாங்கொட.
இரன்ஷா, 142, மரியா வீதி, ஜா-எல.
சுதிபனீ, ர/முலுதொட வித்., முலுதொட.
சந்தருவன், 40, பிரதான வீதி, ராஜகிரிய.
சமீர, குண்டசாலை, கண்டி
ரஷ்மீ, 171/சீ, பாலுரகெதரவத்த, எஹெலியகொட.
ஷேஷான், 405/1, கெமுனு மாவத்தை, பன்னிப்பிட்டிய.
சுவினி, 79/11, குருணாகலை வீதி, சிலாபம்.
தரிந்து தர்ஷன, 09, கொஸ்கஹகும்புர, தியத்தலாவ.
பிரியதர்ஷனி, அலகொலமட, தொடம்கஸ்லந்த.
சமோதி சிரிசரிய, ஹெவிவிபிடிய, அரனாயக்க.

# ஆசிய கனிஷ்ட ஸ்கொஷ் போட்டிகள் இலங்கையில்



ஆசிய கனிஷ்ட 'ஸ்கொஷ்' போட்டிகள் அடுத்த வருடம் 2010 ஆம் ஆண்டில் இலங்கையில் நடத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

19 வயதிற்கும் 15 வயதிற்கும் கீழான பிரிவுகளைச் சேர்ந்த போட்டியாளர்களுக்கான மேற்படி போட்டிகள் அடுத்த வருடம் ஜூலை மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறும்.

ஆசியாவைச் சேர்ந்த 16 நாடுகள் இப்போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன. இதற்கு முன்னர் 1991 ஆம் ஆண்டில்தான் இலங்கையில் முதல் தடவையாக ஆசிய ஸ்கொஷ் போட்டிகள் நடைபெற்றிருந்தன. இந்த போட்டிகளில் கலந்து கொள்வதற்கான போட்டியாளர்களை இனங்காணும் பொருட்டே 1990 ஆம் ஆண்டில் தேசிய கனிஷ்ட ஸ்கொஷ் போட்டிகள் ஆரம்பிக்கப்பட்டன.

# 35 வருடங்களின் பின்னர் டெஸ்ட் நடக்கும் மைதானம்

**இந்தியாவில் இலங்கை-இந்தியா அணிகளுக்கிடையே நடைபெறவுள்ள டெஸ்ட் தொடரில் மும்பாய் நகரிலுள்ள பழைமையான ஒரு மைதானத்தில் நீண்ட காலங்களுக்குப் பின்னர் டெஸ்ட் போட்டியொன்று நடைபெறவுள்ளது.**

**'கார்கோன்' என்றழைக்கப்படுகின்ற இந்த மைதானத்தில் 36 வருடங்களுக்கும் பின்னரே மீண்டும் டெஸ்ட் போட்டியொன்று நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.**

**முதன்முதல் டெஸ்ட் போட்டியொன்று இந்த மைதானத்தில் 1948 ஆம் ஆண்டிலேயே நடைபெற்றது. அவ்வாறே, இறுதியாக 1973 ஆம் ஆண்டில் டெஸ்ட் போட்டியொன்று நடைபெற்றதன் பின்னர் நீண்ட காலத்திற்கு அங்கு டெஸ்ட் போட்டிகள் எதுவும் நடைபெறவில்லை.**

# வலுவிழந்தோரின் மனோவலிமை



இந்தியாவின் ஜெய்ப்பூர் செயற்கை கால்களை தயாரிக்கும் நிறுவனத்தின் வழிகாட்டலின்கீழ் 'எடெக்ஸ்' செயற்கை கால்களை பொருத்திக் கொண்டுள்ளவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

5 வயதிற்கு மேல் வயதின் அடிப்படையில் பல்வேறு பிரிவுகளின் கீழ் பல போட்டியாளர்கள் இதில் பங்குபற்றினர். ஏராளமான மெய்வல்லுனர் போட்டிகளுடன் இன்னும் பலவித போட்டிகளும் மேற்படி விளையாட்டுப் போட்டிகளில் இடம்பெற்றன.

வலுவிழந்தோரின் மனோபலத்தை அதிகரிக்கும் நோக்கிலேயே, இந்த வகையிலான போட்டிகள் நடத்தப்படுவதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விலை உயர்ந்த நாய்: டிபெடன் மஸ்டிஃப்



'டிபெடன் மஸ்டிஃப்' (Tibetan Mastiff) எனும் இனத்தைச் சேர்ந்த நாய்கள்தான் இன்று உலகில் அதிகூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள நாய்களாகும்.

இந்த ரக நாய்களின் பூர்வீகம் மத்திய ஆசியாவாகும். முற்காலத்தில் இருந்தே இவை கடுமையான பாதுகாப்புச் சேவைகளுக்காகப் பயன்படுத்தப்படும் காவல் நாய்களாக இருந்து வருகின்றன.

அண்மையில் சீனாவில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. அதன்படி, சீன செல்வந்தர்களின் சுகபோக அம்சங்கள் உள்ளடங்கிய பட்டியலில் டிபெடன் மஸ்டிஃப் இன நாய்களும் அடங்கியிருப்பதாக சீன ஊடகங்கள் தகவல்களை வெளியிட்டுள்ளன. சீனாவிலுள்ள செல்வந்த இளம் பெண்ணொருவரால் 6 லட்சம் அமெரிக்க டொலர்கள் பணம் கொடுத்து டிபெடன் மஸ்டிஃப் இன நாயொன்று வாங்கப்பட்டதாக அண்மையில் சீன ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

அந்த இளம் பெண் இதுகுறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்; ''தங்கத்திற்கு விலை உண்டு. எனினும், டிபெடன் மஸ்டிஃப் ரக நாய்க்கு விலையை நிர்ணயிக்க முடியாது. அதன் விலையோ மிக அதிகமானது'' என்று கூறியுள்ளார்.

திபெத்திலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் டிபெடன் மஸ்டிஃப் இன நாய்கள் மிகவும் சொற்பமாகவே உள்ளன.திபெத்தில் உள்ள இந்த இன நாய்கள் பெரும்பாலும் பௌத்த நிலையங்களை காவல் காப்பதற்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை அளவில் மிகப்பெரியன. சாதாரணமாக இந்த இன நாயொன்று சுமார் 80 சென்ரிமீற்றரிலும் அதிகமான உயரத்தைக் கொண்டது.அதன் நிறை சுமார் 80 கிலோகிராம் அளவில் இருக்கும். மேற்குலக நாடுகளில் டிபெடன் மஸ்டிஃப் இன நாயொன்றின் விலை 1400 அ.டொலர்கள் முதல் 2000 அ.டொலர்கள் வரை நிர்ணயிக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அனைவருக்கும் 'விஜய்' பத்திரிகை வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது

## 2009, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



களு/நளீம் ஹாஜியார் மகளிர் கல்லூரியில் கல்வி பயிலும் எம்.என்.எஃப்.நஹ்லா, 167 புள்ளிகளைப் பெற்று, பாடசாலையில் அதிகூடிய புள்ளிகளையும் மாவட்டத்தில் 5 ஆம் இடத்தைப் பெற்றவராகவும் திகழ்கின்றார். இவர் ஆசிரியர்களான எம்.எஸ்.எம்.நளீம்-எம்.பீ.எஃப்.றிஸானியா தம்பதியரின் புதல்வியாவார்.



வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் விக்னேஸ்வரன் அருண்காந்த், 161 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.



மே/கள/வெலே கொட அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.எஃப்.அவுரா, 145 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.



யா/கொக்குவில் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் கல்வி கற்கும் கேதீஸ்வரன் தாரணி, 143 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.



மே/கள/வெலேகொட அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.எஃப்.சபீனா, 157 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.



மே/கள/வெலே கொட அரசினர் முஸ்லிம் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் ஏ.யூ.எஃப்.சாஜிதா, 141 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.



**கொழும்பு-12, அல்-ஹிக்மா கல்லூரியிலிருந்து 15 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். கொழும்பு மாவட்டத்தில் தமிழ்மொழி மூலமான முஸ்லிம் பாடசாலைகளில் கூடுதலான மாணவர்கள் சித்தியடைந்துள்ள பாடசாலை இதுவாகும்.**


சித்தியடைந்த மாணவர்கள் பற்றிய விபரங்கள் வருமாறு;

எம்.எஃப்.ஹப்ஸா (176 புள்ளிகள்) இவர் எம்.ஐ.எம்.பவுஸி-ஜுமானா தம்பதியரின் புதல்வி ஆவார். ரி.எம்.தில்சாத் (162 புள்ளிகள்) இவர் எம்.ஐ.தௌபீக்-ரஹுமத்துல் பாஹிதா தம்பதியரின் புதல்வன் ஆவார். எஸ்.எச்.அப்துர் ரஹ்மான் (158 புள்ளிகள்) இவர் சாஹுல் ஹமீட்-மிஸ்ரியா தம்பதியரின் புதல்வன் ஆவார். எஃப்.எஸ்.கலிலுர் ரஹ்மான் (158 புள்ளிகள்) இவர் பசால் சிராஸ்-எஃப்.ரிஸ்னா தம்பதியரின் புதல்வன் ஆவார். எம்.ஏ.ஏ.எம்.நுஸ்ரி (157 புள்ளிகள்) இவர் எம்.அன்வர் அலி-சித்தி சாஹிலா தம்பதியரின் புதல்வன் ஆவார். எம்.எஃப்.எம்.ஸிமாம் (155 புள்ளிகள்) இவர் எம்.பிரோஸ்-ரம்ஸியா பேகம் தம்பதியரின் புதல்வன் ஆவார். எம்.எப்.அப்துல் காலிக் (154 புள்ளிகள்) எம்.பாயீஸ்-சாஜிதா தம்பதியரின் புதல்வன் ஆவார், எம்.ஏ.எஃப்.முபஸ்ஸிரா (154 புள்ளிகள்) இவர் எம்.அஸ்வர்-மரினா தம்பதியரின் புதல்வி ஆவார். வை.என்.ஏ.ஆசிப் (151 புள்ளிகள்) இவர் நிஸ்வர்-சித்தி மாஜா தம்பதியரின் புதல்வன் ஆவார். எம்.ஏ.எம்.ஹம்ஸா (150 புள்ளிகள்) இவர் எம்.அன்வர்தீன்-நூர் ஸஹிதா தம்பதியரின் புதல்வன் ஆவார். கே.எம்.ஏ.முஸ்தாக் (150 புள்ளிகள்) இவர் குத்தூஸ் மொஹமட்-ஹயாத்து பீ பீ தம்பதியரின் புதல்வன் ஆவார். எம்.என்.எஃப்.சுமையா (150 புள்ளிகள்) இவர் எம்.நஸீர்-சித்தி முர்சிதா தம்பதியரின் புதல்வி ஆவார். எம்.ஆர்.எஃப்.ரிஸ்வானா (149 புள்ளிகள்) இவர் எம்.ரிஸ்வர்-அமீனா தம்பதியரின் புதல்வி ஆவார். எம்.ஆர்.துபைல் (147 புள்ளிகள்) இவர் எம்.ரம்ஸி-எஃப்.பாமியா தம்பதியரின் புதல்வன் ஆவார். எம்.ஐ.எம்.இமாம்டீன் (141 புள்ளிகள்) இவர் எம்.இன்பியாஸ்-எஃப்.ரிஹானா தம்பதியரின் புதல்வன் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவுக்கு விருந்து 230 விடைகள்

**போட்டி: 01**




**போட்டி: 04**

1. அந்த சிறைச்சாலையில் குற்றவாளிகளுக்கு பல்வேறு தண்டனைகள் வழங்கப்பட்டன/ வழங்கப்படுகின்றன.
2. விளைநிலங்களில் பரவியிருந்த களைகளைப் பிடுங்கியே கமலன் களைப்படைந்தான்.
3. காலில் ஏற்பட்ட காயத்தின் வலி தாங்கமுடியாமல் குழந்தை வீறிட்டு அழுதது.
4. சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத் தப்பட்டு வருகின்றன.

**போட்டி: 05**

* 16 குரங்குகள்
** 16 மரங்கள்

**A, B, C, D, E, F என அடையாளப்படுத்தப்பட்டுள்ள உருக்களை ஒத்த நிழற்பிரதிகளில் அதே எழுத்துக்களை முறையே எழுதுக**

1




## கணக்குப் புதிர் 3

1. ஒரு கடையில் 4 தட்டுக்களில் 4 வகையான பால்மா பெக்கட்கள் ஒரே எண்ணிக்கையில் அடுக்கப்பட்டுள்ளன. ஒரு தட்டில் 16 பெக்கட்கள் வீதம் 4 தட்டுக்களிலும் மொத்தம் எத்தனை பெக்கட்கள் உள்ளன?..........................................
2. 100 ஐ 2 ஆல் வகுத்து, வரும் விடையுடன் 7 ஐக் கூட்டினால், தாரணியின் அப்பாவின் வயது வரும். அவரின் வயதிலிருந்து 15 ஐக் கழித்து, வரும் விடையுடன் 4 ஐக் கூட்டினால் தாரணியின் அம்மாவின் வயது வரும். ஆகவே;

* தாரணியின் அப்பாவின் வயது யாது?

..........................................

** தாரணியின் அம்மாவின் வயது யாது?

..........................................





தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2009.11.11 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 233
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு


## 5 இடைவெளிகளை நிரப்புங்கள்




## குழம்பியுள்ள வசனங்களை ஒழுங்கமைத்து, குட்டிக்கதையை அமைக்க 4

1. அந்தக் காட்டில் தன்னை அடக்க ஆளில்லை என்ற எண்ணத்துடன் தந்திரம் மிக்க நரியொன்று வாழ்ந்து வந்தது.
2. அப்போது காட்டின் குன்றொன்றின் மேலிருந்த முரசொன்றைக் கண்டது.
3. உடனே நரி, ''ஐயோ! ஒரு ராட்சத மிருகம் என்னைக் கொல்ல வருகின்றதே..'' எனக் கூறியவாறு ஓடியது.
4. ஏதோ ஒரு விலங்குதான் இறந்து கிடக்கின்றது என எண்ணி அதன் அருகில் சென்றது.
5. நரியின் ஏமாற்றத்தைக் கண்டு ஏனைய விலங்குகள் வயிறு குலுங்கச் சிரித்தன.
6. இதன் நடவடிக்கைகள் ஏனைய விலங்குகளுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்தன.
7. அதன்போது வீசிய காற்றின் காரணமாக அங்கிருந்த மரக்கிளைகள் முரசின் மீது மோதியதும் முரசிலிருந்து பேரோசை எழுந்தது.
8. ஒருநாள் கடும் பசியால் வாடிய அந்த நரி, இரை தேடிக் காட்டில் அங்குமிங்கும் அலைந்தது.
9. எனினும், இரை எதுவும் கிடைக்கவில்லை.

## வழி காட்டுங்கள் 2



## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 230 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
அஸ்பா ஜிஃப்ரி, தரம் - 7I,
புனித தோமையர் பெ.பாட., மாத்தளை.

**போட்டி: 02**
ச.சாரங்கா, தரம் - 1,
யா/கொழும்புத்துறை இ.ம.வித்.,
கொழும்புத்துறை.

**போட்டி: 03**
ச.றஜீபன், தரம் - 3A,
யா/நாவற்குழி ம.வித்., நாவற்குழி.

**போட்டி: 04**
எஃப்.ஷம்லா, தரம் - 8,
பதியுத்தீன் மஹ்மூத் ம.கல்., கண்டி.

**போட்டி: 05**
கே.ஜி.காருண்யா, தரம் - 7A,
ஹைலன்ஸ் ம.கல்., ஹட்டன்.

### பாராட்டுப் பெறுவோர்

* பா.ரூபிணி, தரம்-8A, சுழிபுரம் விக்டோரியா கல்., சுழிபுரம்.
* எம்.எச்.எம்.ரஸீன், தரம்-5, ஸாஹிரா வித்., குருவிட்ட.
* றிசாட் ராசிக், தரம்-6, உடுதெனிய மு.ம.வித்., உடுதெனிய.
* ஜே.ஜே.சாள்ஸ், தரம்-3, மகா ஊவா த.வித்., வலப்பனை.
* ஃபாத்திமா முஸ்னிபா, தரம்-9, வியாங்கல்லை மு.ம.வித்., வியாங்கல்லை.
* ஏ.ருமேஷ்குமார், தரம்-6C, ஊவா விஞ்ஞான கல்., ஹாலி-எல.
* கே.நிஷிந்தன், தரம்-8D, வவுனியா த.ம.ம.வித்., வவுனியா.
* செ.சுரேந்தர், தரம்-11, இந்து ம.கல்., புத்தளம்.
* ஷஃபீக் ரஹீம்டீன், தரம்-10, றோயல் ஆ.பா., மாத்தளை.
* எம்.ஏ.எஃப்.ஸாஜிதா, தரம்-10B, ஸாஹிரா ம.வித்., வத்தளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாக் காணும் பண்ணவ முஸ்லிம் மத்திய கல்லூரி




அதிபர்
எம்.எஸ்.சலாஹுத்தீன்

பண்ணவ முஸ்லிம் மத்திய கல்லூரியின் பொன்விழா கடந்த ஒக்டோபர் 28 ஆம், 29 ஆம் திகதிகளில் கொண்டாடப்பட்டது.

குருநாகல் மாவட்டத்தில் நிக்கவெரட்டிய கல்வி வலயத்தில் கொபேய்கனே கல்விக்கோட்டத்தில் பண்ணவ என்னும் எழில்மிகு கிராமத்தின் மத்தியில் கலங்கரை விளக்காக அமைந்துள்ள ஒரேயொரு முஸ்லிம் மத்திய கல்லூரி இதுவாகும். அருகே அமைந்துள்ள பள்ளிவாசலும் அதனை அண்டிய பகுதியில் அமைந்துள்ள செந்தாமரைக் குளமும் முன்பக்கமாக அமைந்துள்ள பிரதான வீதியும் அதற்கு அருகே அமைந்துள்ள தென்னந்தோப்பும் இக்கலையகத்தின் வசீகரத் தோற்றத்திற்கு மேலும் மெருகூட்டுகின்றன.

1959 ஆம் ஆண்டு நூற்றிமுப்பது மாணவர்களுடனும் ஐந்து ஆசிரியர்களுடனும் ஆரம்பமாகிய இப்பாடசாலை ஆரம்பப் பாடசாலையாகவும் கனிஷ்ட பாடசாலையாகவும் மகா வித்தியாலயமாகவும் வளர்ந்து தற்போது மத்திய கல்லூரியாக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். இன்று ஏறத்தாழ அறுநூறு மாணவர்களையும் முப்பத்துமூன்று ஆசிரியர்களையும் கொண்டு இது இயங்குகிறது.

தன்னுடைய பணியிலே கிராமத்திற்கும் நாட்டிற்கும் சிறந்த பிரஜைகளை உருவாக்கி அவர்களின் சேவையின் மூலம் தன்னை வளர்த்து பெருமிதம் காணும் ஒரு கலையகமாக இது திகழ்கிறது. எம் கலையகம் தனது வளர்ச்சிப் பணியில் கல்வியில் புலமைப்பரிசில் பரீட்சையில், க.பொ.த (சா/தர, உயர் தரம்) ஆகியவற்றில் சிறந்த அடைவுகளைக் கண்டுள்ளது.

பௌதிக வளரீதியாகவும் எம் கலையகம் வகுப்பறைகள் மாடிக்கட்டடங்கள், விஞ்ஞான ஆய்வுகூடம், கணினிப் பிரிவு, நூலகம், செய்பாட்டறை, பல்லூடகப் பிரிவு போன்றவற்றையும் கொண்டுள்ளது. இவ்வாறாக, கல்வி வளர்ச்சிக்கு அடிப்படையான போதிய வளங்களை இது பெற்றுக் கொண்டுள்ளது.


ஆசிரியர் குழு


கிரிக்கெட் குழு


தரம் 1 முதல் 5 வரை மாணவர்கள்



தரம் 1 முதல் 5 வரை மாணவிகள்

எமது கல்லூரியின் ஆசிரியர் குழு அன்று தொட்டு இன்று வரை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு வருகின்றது. தற்போதைய எமது கல்லூரியின் அதிபராக எம்.எஸ்.சலாஹுத்தீன் அவர்கள் கடமையாற்றி வருகின்றார். அவரின் அயராத முயற்சியும் சிறந்த தலைமைத்துவமும் இக்கலையகத்தின் முன்னேற்றத்திற்கு மேலும் வழிவகுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

2009 இல் பொன்விழாக் காணும் எமது கல்லூரி அதன் நிலைப்பாடுகளை ஐம்பது ஆண்டு காலத்தில் பெருமளவில் பூர்த்தி செய்து கொண்டிருப்பது அது கண்ட பெரு வெற்றியாகும். இப்பொன்விழாவில் இதுவரை இப்பாடசாலையில் கல்விப் பணிபுரிந்து சென்ற அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். இத்துடன், மாணவர்களின் ஆக்கத்திறன் செயற்பாட்டை வெளிப்படுத்தும் வகையில் கண்காட்சிகள்,மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள், பரிசளிப்புகள், அதோடு கல்விமான்களின் கல்விச் சொற்பொழிவுகள் உட்பட புதிய கட்டடத் திறப்புவிழா என்பனவும் இடம்பெற்றன.

மாகாண முதலமைச்சர் மற்றும் ஏனைய அமைச்சர்கள் மாகாண சபை உறுப்பினர்கள், மாகாண வலயக் கல்விப்பணிப்பாளர்கள் ஆகியோர் பொன்விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஆயிஷா ராசிக், தரம் - 13,
நிக/பண்ணவ மு.மத்.கல்.,பண்ணவ. கொபேய்கனே.



# ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம் எப்படி உருவானது?

தோற்றத்தைப் பார்த்து ஆளை மதிப்பிடக்கூடாது. இதற்கு சிறந்த உதாரணமாகத் திகழ்கிறது அமெரிக்காவின் கெலிஃபோர்னியாவில் உள்ள ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம் உருவான நிகழ்வு.

அமெரிக்காவின் பிரபல பல்கலைக்கழகமான ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தின் தலைவரை சந்திப்பதற்கு ஒரு தம்பதியினர் சென்றுள்ளனர். இவர்களின் எளிமையான உடைகளைப் பார்த்து பல்கலைக்கழகத் தலைவரின் உதவியாளர் இவர்கள் தலைவரைப் பார்க்க அனுமதிக்கவில்லை. எனினும், அவர்களின் பிடிவாதம் காரணமாக பின்னர் அவர்கள் தலைவரை சந்திக்க அனுமதி கிடைத்துள்ளது. இறந்து போன தங்கள் மகனின் நினைவாக பல்கலைக்கழகத்துக்கு ஒரு கட்டடத்தைக் கட்டிக்கொடுக்க அவர்கள் விரும்பியபோதும் அவர்களுக்கு தகுந்த மரியாதை கிடைக்கவில்லை.

அதன்பின்னர் அங்கிருந்து வெளியேறிய அவர்கள் தங்கள் மகனின் நினைவாக பல்கலைக்கழகமொன்றையே கட்டி விட்டால் என்ன என்று நினைத்தனர். அதனை யடுத்தே கெலிஃபோர்னியாவில் அவர்கள் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகத்தை உருவாக்கினார்கள். இந்தப் பல்கலைக்கழகம் 1885 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்தை ஸ்தாபித்த அந்தத் தம்பதியர் அமெரிக்காவின் முன்னாள் செனட்டரும் கெலிஃபோர்னியாவின் முன்னாள் ஆளுநருமான லேலண்ட் ஸ்டான்போர்டும் அவரின் மனைவியான ஜேன் லத்ரோப் ஸ்டான்போர்டுமாவர். அவர்களுடைய மகனான லேலண்ட் ஸ்டான்போர்ட் தனது 16 ஆவது பிறந்த தினத்துக்கு சில வாரங்களுக்கு முன்னரே தைபோயிட் காய்ச்சலால் இறந்தார். மகனின் பிரிவால் துயருற்றிருந்த அந்தப் பெற்றோரின் துயரத்தை ஹர்வார்ட் பல்கலைக்கழக தலைவரும் அவரின் உதவியாளரும் உணரவில்லை. அதனாலேயே அவர்களை உரிய முறையில் கௌரவிக்கத் தவறிவிட்டனர். ஆனால், அது ஒரு பெரும் நன்மையில் முடிந்து விட்டது. இன்று பல்லாயிரக் கணக்கான கல்விமான்களை உருவாக்கும் கலையகமாக அந்தப் பல்கலைக்கழகம் தலை நிமிர்ந்து நிற்கிறது.

உயர்கல்விக்காக பாரிய ஒரு பல்கலைக்கழகத்தை உருவாக்கும் எண்ணத்தில் ஸ்டான்போர்ட் தம்பதியர் பாலோ அட்லோ என்னுமிடத்தில் உள்ள தமது பண்ணை நிலத்தை பயன்படுத்தியுள்ளனர். இந்தப் பல்கலைக்கழகம், வர்த்தக பாடசாலை, சட்டப் பாடசாலை, மருத்துவ பாடசாலை, பொறியியல் பாடசாலை என்று பல்வேறு பிரிவுகளையும் கொண்டு இயங்குகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பகால கணினி







இன்றைய 21 ஆம் நூற்றாண்டில் நமது விரல் நுனியில் கணினியை காண்கின்றோம். தற்போது கணினி இல்லாவிட்டால் உலகமே செயல் இழந்து விடும் நிலை ஏற்படும் எனலாம்.

இவ்வாறு உலகில் ஆதிக்கம் செலுத்தும் கணினியின் பிறப்பு, ஆரம்ப வடிவம் எவ்வாறு நிகழ்ந்தது தெரியுமா? அதன் பின்னால் நிகழ்ந்த பல்லாண்டு கால உழைப்பு எப்படிப்பட்டது என்பதைப் பின்னோக்கிப் பார்க்கும்போது வியப்பு மேலிடுகிறது. அறுபது ஆண்டுகளுக்கு முன் கண்டுபிடிக்கப்பட்ட முதல் கணினியை வைக்க ஒரு மிகப் பெரிய அறை தேவைப்பட்டது. புள்ளிகளும் கோடுகளும் இணைத்து செயல்பட்ட முதல் கணினியின் எடை ஆயிரம் கிலோ (1000kg). அந்தக் கணினியின் வேகமும் மிகவும் குறைவு. தற்போதைய சாதாரண கணினிகளின் நினைவாற்றல் அந்த முதல் கணினியின் நினைவாற்றலைவிட பத்து லட்சம் மடங்கு அதிகம்.

1948 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 21 ஆம் திகதி இந்த முதல் கணினி செயற்பட்ட வினாடியே உலகில் மாபெரும் தொழில்நுட்ப அறிவியல் விஞ்ஞான வளர்ச்சிக்கான முளைவிட்ட வினாடி எனலாம். "அந்த வினாடியைப் போல உன்னதமான நிமிடம் என் வாழ்வில் வந்ததில்லை" என அதைக் கண்டுபிடித்த பேராசிரியர் பிரட்டிவில்லியம்ஸ் ஒருமுறை குறிப்பிட்டிருந்தார். அந்த முதல் விதை விழாமல் இருந்திருந்தால் இன்றைக்கு நாம் காணும் பெரும்பாலான வளர்ச்சிகள் சாத்தியமில்லாமல் போயிருக்கக்கூடும். 'பேபி' என்று பெயரிடப்பட்ட இந்த மகத்தான கண்டுபிடிப்பை நிகழ்த்திய டாட் கில்பர்ன் மற்றும் பிரட்டிவில்லியம்ஸ் இருவருமே இன்று உயிருடன் இல்லை. ஆனாலும், அவர்களின் பெயர் வரலாற்றில் பதிக்கப்பட்டுவிட்டன.

அந்தளவிற்கு கணினிப் புரட்சி உலகை ஆதிக்கம் செலுத்துகின்றதென்றால் அது மிகையில்லை.

# மூன்று கண்களுடைய அபூர்வ விலங்கினம்!

## நியூஸிலாந்தில் கண்டறியப்பட்டுள்ளது





பொதுவாக இரண்டு கண்களையுடைய விலங்குகளையே நாம் அறிவோம். ஆனால், மூன்று கண்களை உடைய ஒரு விலங்கும் உள்ளதாக சமீபத்திய செய்தியொன்று தெரிவிக்கின்றது. மூன்று கண்களையுடைய இந்த விலங்கின் பெயர் டுவடரா (Tuatara) என்பதாகும். ஓணானின் தோற்றத்தை ஒத்ததாக காணப்பட்டாலும் இது ஊர்வன வகைக்குள் சேர்க்கப்படாது நான்கு கால் விலங்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நியூஸிலாந்தில் கண்டறியப்பட்டுள்ள இந்த புது வகை விலங்கானது வேறெந்த நாட்டிலும் இதுவரை கண்டறியப்படவில்லை. மேற்படி, 'டுவடரா'வின் ஆண்இனத்தின் எடை 1 கிலோ கிராம் அளவு வரையில் இருக்கும் என்பதும் பெண் இனத்தின் எடை அதில் அரைப்பங்காகவும் இருக்கின்றது.

இந்த 'டுவடரா' விலங்கானது இருநூறு மில்லியன் வருடங்களுக்கு முன்னரே தோன்றியிருக்கக்கூடும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். குறித்த 'டுவடரா' விலங்கின் மூன்றாவது கண்ணானது அதன் தலைக்கும் மூளைக்கும் இடைப்பட்ட பின்புற நடுப்பகுதியில் காணப்படுகின்றது. தவளை, எலி, புழுக்கள் ஆகியனவே இவற்றின் உணவாக அமைந்துள்ளன. இவற்றின் சாதாரண ஆயுட்காலம் 77 வருடங்களாகும்.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2009, நொவெம்பர் மாதம் 04 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 04, 2009.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org